விடை. உயிரோடெழுந்திருக்குஞ் சரீரம் முந்தின சரீரந்தான் (யோபு ௰௯, ௨௫. ௨௭; ௧ கொரி. ௰௫, ௫௩); ஆனால் அது இனிச்சாகவும் அழுகிப்போகவுங் கூடாத சரீரமாயிருக்கும் (௧ கொரி. ௰௫, ௪௪).

௪௮௪. வினா. உயிரோடெழுந்திருக்கும் பரிசுத்தவான்களுடைய சரீரங்களுக்கும் பொல்லாதவர்களுடைய சரீரங்களுக்கு மிருக்கிற வித்தியாசமென்ன.

விடை. பரிசுத்தவான்களுடைய சரீரங்கள் கிறிஸ்துவின் சரீரத்துக்குச் சாயலாகிச் சூரியனைப்போலவும் நட்சத்திரங்களைப்போலவும் அவர்களுடைய பிதாவின் இராச்சியத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கும். பொல்லாதவர்களின் சரீரங்களோ அருவருப்பும் இருள் மூடினதும் பயங்கரமுள்ளதும் பிசாசின் சாயலுக்கு ஒத்த அவலட்சணமுள்ளதுமாயிருக்கும் (தானி. ௰௨, ௩; மத். ௰௩, ௪௩; பிலிப். ௩, ௨௰. ௨௧; ௧ கொரி. ௰௫, ௪௰—௫௰).

௪௮௫. வினா. இந்த உபதேசத்தினால் நமக்கு வருகிற ஆறுதலென்ன.

விடை. பரிசுத்தஆவியினால் பரிசுத்தமாக்கப்பட்டு வருகிற நாம் இந்தச்சரீரத்திலிருக்குமட்டும் பற்பல குறைவுகளையுடையவர்களாயிருக்கிறோம். ஆனால் மாமிச உயிர்த்தெழுதலில் ஆத்துமத்தின்படியேயுஞ் சரீரத்தின்படியேயுங் கறையற்ற சுத்தாங்கத்தையடைந்திருப்போம். அப்போது பராபரனுடைய சாயல் நம்மிடத்தில் குறைவற்ற பிரகாரங்காணப்படும். இனிப்பாவமானாலும் மரணமானாலும் நம்மையணுகாது. இதே நமக்குப்பெரிய ஆறுதல.

௪௮௬. வினா. நாம் இதையறிந்து செய்யதக்கதென்ன.

விடை. இத்தனை மகிமையாய் எழுந்திருக்கும் நமது சரீரங்களை இனிப்பாவங்களினால் அசுத்தமாக்காமல் அவைகளைச் சுத்தமாகக் காப்பாற்றிக்கொண்டு அவைகளுக்கு இனி வரப்போகிற மகிமையை நினைத்து இந்தலோகத்தில் அவைகளுக்குண்டாயிருக்கிறதுன்பங்களைச் சந்தோஷத்தோடு அநுபவித்து மாமிச உயிர்த்தெழுதலில் பரிசுத்தவானகளோடுகூட நித்திய சீவனுக்கென்று உயிரோடெழுந்திருக்கும்படிக்குச் சகல நாட்களிலும் பரிசுத்தத்தில் நடக்கவேண்டும் (௧ கொரி. ௰௫, ௫௪-௫௮).

நித்திய சீவனைப்பற்றியது.

௪௮௭. வினா. எல்லாமனிதரும் உயிரோடெழுந்திருந்து நியாயந் தீர்க்கப்பட்ட பிற்பாடு எங்கேபோவார்கள்.

விடை. சபிக்கப்பட்டவர்கள் என்றென்றைக்கும் வாதிக்கப்படுகிறதற்கு நரகத்தில் தள்ளுண்டுபோவார்கள் (மத். உரு, சசு); தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ நித்திய சீவனாகிய மோட்சத்திற்குப்போவார்கள் (மத். உரு, ௩௪. சசு).

சஅஅ. வினா. ஆர் நித்தியசீவனுக்குப் பங்குள்ளவர்களாவார்கள்.

விடை. இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அதில் முடிவு பரியந்தம் நிலைகொண்டிருக்கிறவர்கள் எல்லாரும் நித்திய சீவனுக்குப் பங்குள்ளவர்களாகித் தேவதூதர்களைப்போல் மகிமையுள்ளவர்களாயிருந்து அவர்களோடு என்றென்றைக்குஞ் சந்தோஷப்படுவார்கள் (யோவா. சு, சய; லூக். உய, ௩சு; எபிரே, யஉ, உஉ. உச).

சஅகூ. வினா. அவர்கள் நித்தியசீவனை எங்கே அநுபவிப்பார்கள்.

விடை. திரியேக பராபரன் இருக்கிற மகிமையின் இராச்சியத்தில்தான் (யோவா. யச, ௩; உ கொரி. ரு, க; உ பேது. ௩, ய-யாக).

சகூய. வினா. நித்தியசீவனின் மகிமை யாவதென்ன.

விடை. மோட்சஞ் சேர்ந்தவர்கள் க) பராபரனைக் குறைவற்ற பிரகாரமறிந்து முகமுகமாய்க்கண்டு (மத். ரு, அ; க கொரி. யக, யஉ; யோவா. யஎ, ௩; க யோவா. ௩, உ),

உ) குறைவற்ற பிரகாரம் அவரோடு ஐக்கியமாயிருந்து (யோவா. யஎ, உய. உச; க கொரி. யரு, உஅ),

௩) ஒப்பற்ற சந்தோஷத்தையுஞ் சொல்லிமுடியாத மோட்சபாக்கியத்தையும் முடிவில்லாமல் அநுபவிக்கிறது தான் நித்தியசீவனின் மகிமை (க பேது. க, ௩-கூ; க கொரி. உ. கூ; சங்கீ. ௩சு, கூ).

சகூக. வினா. இப்படிக்கொத்த நித்தியசீவன் நமக்கு எதினால் வருகிறது.

விடை. நாஞ் செய்த கிரியைகளாலல்ல, பராபரனுடைய மகத்தக் கிருபையினால் வருகிற ஈவென்றும் இயேசுகிறிஸ்து சம்பாதித்த இரட்சிப்பின் பலனென்றுஞ் சொல்லவேண்டும் (ரோமர் சு, உ௩).

சகூஉ. வினா. நித்தியசீவனைப்பற்றிய உபதேசத்தினால் நமக்கு வருகிற ஆறுதலென்ன.

விடை. நாம் பாவத்தினால் இழந்துபோன நன்மைகளையெல்லாம் நித்தியசீவனில் மறுபடியுங் குறைவற்ற பிரகாரம்

அடைவோமென்கிற நிச்சயம் எல்லா ஆறுதல்களிலும் பெரிய ஆறுதலாம்.

௪௧௩. வினா. நாம் இதையறிந்து செய்யத்தக்கதென்ன?

விடை. ௧) நாம் இந்தலோகத்திலிருக்கிறது கொஞ்ச நாளானதினால் இந்தலோகத்தின் நன்மைகளைத் தேடாமல் என்றென்றைக்குமுள்ள பரமநன்மைகளை மாத்திரந் தேடிக்கொள்ளவேண்டும் (கொலோ. ௩, ௨).

௨) நித்தியசீவனுக்குத் தடையான விக்கினங்கள் எல்லாவற்றிற்கும் நம்மை எச்சரிக்கையாய்க் காத்து நித்திய சீவனையடையும்படி போராடிக்கொண்டிருக்கவேண்டும் (எபிரே. ௪. ௮-௰௧; ௧ யோவா. ௩, ௩).

௩) இந்தலோகத்தின் துன்பங்களைச் சந்தோஷமாய்ச் சகித்து விசுவாசபோராட்டம் நன்றாய் முடியும்படிக்குப்பிரயாசப்படவேண்டும் (ரோமர் ௨, ௭; ௮, ௰௮; ௨ பேது. ௩. ௰௪. ௰௫).

மூன்றும் பங்கு.

கர்த்தருடைய செபத்தைப்பற்றியது.

௪௬௪. வினா. கர்த்தருடைய செபத்தை உண்டாக்கினதார்.

விடை. நம்மை மீட்டிரட்சித்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இதை உண்டாக்கித் தம்முடைய சீஷருக்குப்போதித்தார் (மத். ௬, ௯—௰௩; லூக்கா ௰௧, ௨—௪).

௪௬௫. வினா. இந்தசெபம் நமக்கு என்னத்தைத்தெரிவிக்கிறது.

விடை. நாம் பராபரனை நோக்கி எப்படிச்செபிக்கவேண்டுமென்பதை நமக்குத் தெரிவிக்கிறது.

௪௬௬. வினா. செபம்பண்ணுகிறது மிகவும் வேண்டிய காரியமா.

விடை. ஆம், நியாயப்பிரமாணத்தின்படி விலக்கவேண்டியதை விலக்கவுஞ் செய்யவேண்டியதைச்செய்யவும் விசுவாசபபிரமாணத்தில் சொல்லியிருக்கிற விசுவாசம்வேண்டியது. ஆனால் செபம் எங்கே இல்லையோ அங்கே விசுவாசமுமில்லை. நமது ஆத்துமத்திற்குஞ் சரீரத்திற்கும் தேவையான நன்மைகளை எல்லாம் பராபரனுடைய கையில் வாங்குகிறதற்கான எத்தனஞ் செபந்தான்.

௪௬௭. வினா. செபமாவதென்ன.

விடை. விசுவாசமுள்ளவன் பராபரனோடு பேசித் தனக்குவேண்டிய நன்மைகளுக்காக அவரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறதும் அடைந்த நன்மைகளுக்காக அவரை ஸ்தோத்திரிக்கிறதுஞ் செபமாம் (சங்கீ. ௰௬, ௰௪).

௪௬௮. வினா. தம்மை நோக்கிச் செபிக்கும்படிக்குப் பராபரன் உத்தரவு கொடுத்திருக்கிறாரா.

விடை. உத்தரவு கொடுத்திருக்கிறார். நாம் தினந்தோறுஞ் செபம்பண்ணும்படிக்குப் பற்பல வேதவாக்கியங்களைக் கொண்டு நமக்குக்கற்பித்திருக்கிறார் (சங்கீ. ௫௰, ௰௫; மத். ௭, ௭; லூக். ௰௮, ௧; ௧ தெசலோ. ௫, ௰௭).

௪௬௯. வினா. பராபரனை நோக்கிச்செபம்பண்ணவேண்டியவர்களார்.

விடை. எல்லா மனிதருஞ் செபம்பண்ணக் கடமையுள்ளவர்கள் (சங்கீ. ௬௫, ௨); ஆனால் மெய்யாகவே மனஸ்தாபப்பட்டு விசுவாசிக்கிறவர்களொழிய மற்றவர்கள் பராபரனுக்குப்பொருந்தியபடி செபம்பண்ணமாட்டார்கள (லூக். ௰௮, ௰௩—௰௭; ௧ தீமோ. ௨, ௮; ௧ யோவா. ௩, ௨௧-௨௨; சங்கீ. ௱௪௫, ௰௮. ௰௯). குணப்படாமல் பாவங்களில் நிலைத்திருக்கிறவர்களின் செபம் பராபரனுக்கு அருவருப்பாயிருக்கிறது (லூச். ௰௮, ௰௧. ௰௨. ௰௪; யோவா. ௯, ௩௧; யாக். ௪, ௮; வாக். ௨௮, ௯; சங்கீ, ௬௬, ௰௮; ௫௰, ௰௬. ௰௭; ஏசா. ௧, ௰௫. ௰௬).

௫௱. வினா. நாம் நம்முடைய பெலத்தினால் செபம்பண்ணச் சாமார்த்தியமுடையவர்களா.

விடை. எல்லாநற்கிரிகைகளையும் பரிசுத்தஆவி நம்மில் உண்டுபண்ணுகிறதுபோல் விசேஷமாகச் செபம்பண்ணுகிறதும் அவரால நம்மில் செய்யப்படுகிற கிரியையாயிருக்கிறது. அது நமது பெலத்தினால் செய்யப்படுங் கிரியையல்ல (சகரி. ௰௨, ௰: ரோமர் ௮, ௰௫; கலா. ௪, ௬; ௧ கொரிந். ௰௨, ௩).

௫௱௧. வினா. நாம் ஆரை நோக்கிச்செபம்பண்ணவேண்டும்.

விடை. நாம் திரியேகப் பராபரன் ஒருவரையே நோக்கிச் செபம்பண்ணவேண்டும். ஏனெனில் அவர் எங்கும் நிறைந்திருந்து நமது இருதயங்களின விருப்பங்களை எல்லாம் அறிந்திருக்கிறார். அவா சர்வத்திற்கும் வல்லவராக நம்முடைய மன்றாட்டுகளைக்கேட்கவும் நமக்குத்தேவையான யாவையுங் கொடுக்கவும் பெலனுள்ளவராயிருக்கிறார். அவர் சகல இக்கட்டிலும் நமக்குச்சகாயஞ் செய்ய வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறா (சங்கீ. ௫௰, ௰௫). அவரை நாம் கர்த்தருடைய செபத்தில் பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்று சொல்லுகிறோம் (மத். ௬, ௯; சங்கீ. ௩௮, ௯; எரே. ௰௭, ௰; எபேசி. ௩, ௨௰).

௫௱௨. வினா. உயிரற்ற விக்கிரகங்களை நோக்கிச் செபிக்கலாமோ.

விடை. செபிக்கக்கூடாது. அதுகளை நோக்கிச்செபிக்கிறவர்கள் பராபரனறற அஞ்ஞானிகள் (ஏசா. ௪௪, ௯-௨௰).

௫௱௩. வினா. தேவதூதர்களை யானாலும் இயேசுகிறிஸ்துவின் தாயாகிய கன்னிமரியாளையானாலும் மற்றப்பரிசுத்தவான்களை என்கிலும் நோக்கிச் செபிப்பது நியாயமா.

விடை. நியாயமல்ல. எல்லாவற்றையும் உண்டாக்கின பராபரனுக்குச் செலுத்தவேண்டிய கனத்தை உண்டாக்கப்பட்ட வஸ்துக்களுக்குக் கொடுக்க வொண்ணாது. இரட்சிப்பின் கிரியையினால் வரும் மகிமையை எல்லாம் நம்மை இரட்சித்த பராபரனுக்குச் செலுத்தவேண்டியதொழிய மற்றபடியல்ல (எபிரே. ௧, ௬. ௰௪; அறிவி. ௰௯, ௰; மத். ௪; ௰).

௱௪. வினா. நாஞ் செபத்தில் எந்தக்காரியங்களைக்கேட்க வேண்டும்.

விடை. நமக்கும் பிறத்தியாருக்கும் பிரயோசனமான ஆத்தும சரீரநன்மைகளைக் கேட்கலாம். ஆனால் சரீரத்துக் கடுத்தகாரியங்களைப்பார்க்கிலும் ஆத்துமத்திறகடுத்த காரியங்களைக் கேட்கவேண்டும் (மத். ௬, ௩௩). நாஞ் செபத்தில் எப்போதுங் கர்த்தருடைய சித்தத்திற்கு ஒத்திருக்கிற காரியங்களைக்கேட்டு அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் (மத். ௨௬, ௩௯).

௱௫. வினா. நாம் ஆருக்காக மன்றாடவேண்டும்.

விடை. நாம் நமக்காகவுஞ் சகல மனிதருக்காகவும் (௧ தீமோ. ௨, ௨), சத்துருக்களுக்காகவுங்கூட மன்றாடவேண்டும் (மத். ௫, ௪௪. ௪௫; ரோமா. ௰௨, ௨௰). விசேஷமாய் நம்முடைய ஞான சகோதரர்களுக்காகவும் மன்றாடவேண்டும் (யாக். ௫, ௰௬; எபேசி. ௬, ௰௮).

௱௬. வினா. நாம் எப்படிச் செபமபண்ணவேண்டும்.

விடை. ௧) நாம் வாயினால் மாத்திரமல்ல, இருதயக் கருத்தோடுங் கவனத்தோடுஞ் செபமபணணவேண்டும் (மத். ௬, ௫—௮).

௨) பாவிகளாகிய நாம் பராபரனோடு பேசவும் அவரிடத்தில் யாதொன்றைக்கேட்கவும் அபாத்திரரென்று நினைத்து மிகுந்த மனத்தாழ்மையோடு செபம்பண்ணவேண்டும் (௧ மோசே ௰௮, ௨௭; லூக். ௰௮, ௯—௰௪).

௩) நாம் இயேசுவின் நாமத்தில் செபம்பண்ணவேண்டும். அதாவது அவர் நமக்காகச் சம்பாதித்த இரட்சிப்பையும் நமக்காகச் செய்கிறவேண்டுதலையுந திடநம்பிக்கையாய் நம்பிச் சந்தேகமில்லாத விசுவாசத்தோடும் பிள்ளைத் தனமான நம்பிக்கையோடுஞ் செபம்பண்ணவேண்டும் (யோவா. ௰௬, ௨௩. ௨௪; ௨ கொரி. ௧, ௨௰; மாற்கு ௰௧, ௨௩. ௨௪; யாக். ௧, ௬. ௭; ௫, ௰௬. ௰௭).

௪) நாம் இப்படிசெபம்பண்ணப் பரிசுத்தஆவியினாலே ஏவப்பட்டு பிதாவை ஆவியினாலும் உண்மையினாலும் பணிந்து கொள்ளவேண்டும் (யோவா. ௪, ௨௪).

௱௭. வினா. செபம் எத்தனை விதமாயிருக்கிறது.

விடை. அது இரண்டு விதமாயிருக்கிறது. அதாவது வாய்ச்செபமும் மனதின் செபமுமாம். உரக்கப்பேசாமல் மனதில் செபம்பண்ணலாம் (சங்கீ. ௩௮, ௯). ஆனால் மனச்செபமல்லாத வாய்ச்செபம் பலனற்றது (ஏசா. ௨௯, ௰௩. ௰௪).

௱௮. வினா. எப்படிப்பட்ட வணக்கத்தோடு செபம்பண்ணவேண்டும்.

விடை. நமது இருதயத்திலுள்ள மனத்தாழ்மைக்குங் கவனத்துக்கும் விசுவாசதைரியத்துக்கும் ஏற்றிருக்கிற வணக்கத்தோடு செபம்பண்ணவேண்டும் (௪ மோசே ௰௬, ௨௨; மத். ௨௬, ௩௯; தானி. ௬, ௰; எபேசி. ௩, ௰௪; சங். ௱௪௧, ௨; ௧ தீமோத். ௨, ௮; யோவா. ௰௧, ௪௧; ௰௭, ௧; லூக். ௰௮, ௰௩).

௱௯. வினா. நாம் எப்போது செபம்பண்ணவேண்டும்.

விடை. நாம் மனதில் எப்போதுஞ் செபம்பண்ணவேண்டுமென்றுஞ் செபத்தில் சோம்பலாயிராமல் அநுதினமுஞ் செபஞ்செய்கிறதில் அதிகச் சுறுசுறுப்பாயிருக்கவேண்டுமென்றும் வேதத்தில் கற்பிக்கப்பட்டிருக்கிறது (லூக். ௰௮, ௧-௮; ௧ தெசலோ. ௫, ௰௭). நாம் மனதில் எப்போதுஞ் செய்யுஞ் செபத்தைத்தவிர குறிக்கப்பட்ட காலங்களிலும் நாம் அதற்கு ஏவப்படுகிற மற்றக்காலங்களிலும் வார்த்தைகளினாலுஞ் செபம்பண்ணவேண்டும் (சங்கீ. ௫௫, ௰௭. ௰௮; ௬௩, ௬; தானி. ௬, ௰).

௱௰. வினா. நாம் எங்கே செபம்பண்ணவேண்டும்.

விடை. தமது கிருபையோடு எங்கும் நிறைந்திருக்கிற பராபரனை நோக்கி எவ்விடத்திலுஞ் செபிக்கலாம் (யோவா. ௪, ௨௧. ௨௨; ௧ தீமோ. ௨, ௮). விசேஷமாய்த்திருச்சபையுடனே கூடிச்செபத்தின் வீடாகிய கோவிலிலும் (நடபடி. ௩, ௧; லூக. ௰௯, ௪௬), நமது அறைவீடுகளிலும் (மத். ௬, ௫. ௬) செபம்பண்ணவேண்டும்.

௱௰௧. வினா. எல்லாச்செபங்களிலும் பிரதான செபமெது.

விடை. கர்த்தருடைய செபந்தான்.

௱௰௨. வினா. கர்த்தருடைய செபம் எத்தனை பிரிவாயிருக்கிறது.

விடை. மூன்று பிரிவாயிருக்கிறது. க) தொடங்குகிற வார்த்தைகளும் உ) ஏழு மன்றாட்டுகளும் ௩) முடிக்கிற வார்த்தைகளுமாம்.

வினா. கர்த்தருடைய செபத்தை எந்த வார்த்தைகளால தொடங்குகிறோம்.

விடை. பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்கிறவார்த்தைகளினால் தான்.

வினா. இந்த வார்த்தைக் கர்த்தமென்ன.

விடை. பராபரன் நமக்கு மெய்யான பிதாவென்றும் நாம் அவருக்கு மெய்யான பிள்ளைகளென்றும் நாம் விசுவாசித்துப். பிரியமுள்ள பிள்ளைகள் தங்கள் பட்சமுள்ள பிதாவை மன்றாடுகிறதுபோல் நாஞ் சந்தோஷத்தோடும முழு நம்பிக்கையோடும் அவரைச்சேர்ந்து மன்றாடும்படிக்கு அவர் இந்த வார்த்தைகளினால் நம்மை நயம்பண்ணி இழுக்கப் பிரிய சித்தமாயிருக்கிறாரென்பதே.

௱௰௩. வினா. நாம் இந்தச்செபத்தில் வணங்குகிற பிதா ஆர்.

விடை. திரியேகப் பராபரன் தான்.

௱௰௪. வினா. பராபரன் எப்படி நமது பிதாவாயிருக்கிறார்.

விடை. இவர் நம்மை உண்டாக்கி ஞான மறுசென்மத்தினால நம்மைததமது பிள்ளைகளாகச் செனிப்பித்தபடியினால் நமது பிதாவாயிருக்கிறா (மல்கி. உ, ௰; யாக். க, ௰அ; கலா. ௪, ௬. எ; எபேசி. ௩, ௰௪; க யோவா. ௩, க).

௱௰௫. வினா. நாம் இந்தச்செபத்தில் பராபரனை நமது கர்த்தரென்று அழைக்காமல் நம்முடைய பிதாவென்று அழைக்கிற முகாந்தரமென்ன.

விடை. நாம் பராபரனோடு பேசும்போது ஒருவேலைக்காரன் தன் எசமானோடு பேசுகிற பிரகாரமாக அல்ல, ஒரு பிள்ளை தன் பட்சமுள்ள தகப்பனோடு பேசுகிறதுபோல் அவரோடு பேசும்படிக்கு நமக்கு உத்தரவு கிடைத்திருப்பதினாலும் (ஏசாயா ௬௩, ௰௬; ரோமர் அ, ௰௫; கலா. ௪, ௬), அவர் பிதாவடைவான சிநேகத்தினால் நமது மன்றாட்டைக்

கேட்கப் பிரிய சித்தமுள்ளவராயிருக்கிறதினாலும் (மத். ௭, ௯-௰௧) அவரை நமது பிதாவென்று அழைக்கிறோம்.

௩௱௰௬. வினா. நாம் அவரை என் பிதாவே என்று சொல்லாமல எங்கள் பிதாவே என்று சொல்லுவானேன்,

விடை. பூமியில் எங்குஞ் சிதறியிருக்கிற விசுவாசிகளெல்லாரும் ஞானக்கட்டினால் ஐக்கியப்பட்டிருக்கிறதினால் அவர்களிலொருவன் பராபரனை நோக்கிச்செபிக்கும்போது தனக்காகமாத்திரமல்ல, பிறத்தியாருக்காகவுஞ் செபம்பண்ண வேண்டும். இதினால் தான் நாம் என் பிதாவே என்று சொல்லாமல் எங்கள் பிதாவே என்கிறோம்.

௩௱௰௭. வினா. நாம் பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்று சொல்லுவானேன்.

விடை. நாம் வணங்குகிற பிதா பூமிக்கடுத்தவரல்ல, பரமபிதாவாயிருக்கிறா என்பதையும் அவர் எல்லாவற்றுக்கு மேலான மகிமையுடையவரென்பதையும் அறிக்கையிடுகிறவர்களாக அவரை பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்று சொல்லுகிறோம்.

௩௱௰௮. வினா. பராபரன் பரமண்டலங்களிலிருக்கிறாரென்பதற்கர்த்தமென்ன.

விடை. அவர் எங்கும் நிறைந்திருந்தாலும் பரமண்டலங்களில் தமது மகிமை காணப்படுகிற பிரகாரமாக வாசமாயிருந்து பரமண்டலத்துக்கடுத்த மகிமையும் வல்லமையுஞ் சிநேகமுமுள்ளவராய் பூமியிலுள்ள நமக்கு உதத்தாசைசெய்யக் கூடியவராயிருக்கிறாரென்பதுதான் அதற்கு அர்த்தம் (சங்கீ. ௱௰௫, ௨; லூக். ௰௧, ௰௩; ஏசா. ௬௩, ௰௫—௰௬; எரே. ௨௩, ௨௪).

௩௱௰௯. வினா. நாம் இதெல்லாவற்றையும் அறிந்து செய்யத்தக்கதென்ன.

விடை. ௧) நாம் பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்று சொலலும்போதெல்லாம் நாம் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிற அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோமோ அல்லவோவென்று நம்மை நன்றாய்ச் சோதித்துப்பார்கக வேண்டும் (௧ யோவா. ௩, ௧; ௧ பேது. ௧, ௰௪. ௰௫).

௨) அவர் மெய்யாகவே நம்முடைய பிதாவென்று நிச்சயித்துச் சந்தேகப்படாத நமபிக்கையோடு மன்றாட வேண்டும் (லூக். ௰௨, ௩௰—௩௨).

௩) நாம் வணங்குகிற பிதா தேவமகிமையுள்ளவரென்று நினைதது அவருடைய சந்நிதிக்கு நேராக நமமுடைய

மனதை ஏறெடுத்து மிகுந்த தாழ்மையோடும் ஒடுக்கவணக்கத்தோடும் அவரை வணங்கவேண்டும். (௧ பேது. ௧,௰௭).

௫௨௰. வினா. கர்த்தருடைய செபத்திலடங்கியிருக்கிற ஏழு மன்றாட்டுகளை எப்படிப் பிரிக்கலாம்.

விடை. பராபரன் நமக்கு நன்மையைக் கட்டளையிட வேண்டுமென்று முந்தின நாலுமன்றாட்டுகளிலுஞ் சகல தீமைகளிலுமிருந்து இரட்சிக்கவேண்டுமென்று பிந்தின மூன்று மன்றாட்டுகளிலும் வேண்டிக்கொள்ளுகிறோம். மேலும் ஆத்துமத்திற்கடுத்த நன்மைகளைக்கொடுக்க முந்தின மூன்று மன்றாட்டுகளிலுஞ் சரீரத்துக்கடுத்த நன்மையைக் கொடுக்கும்படிக்கு நாலாம் மன்றாட்டிலும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

முதலாம் மன்றாட்டைப்பற்றியது.

வினா. முதலாம் மன்றாட்டென்ன.

விடை. உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக.

வினா. நாம் இப்படி மன்றாடுவதற்கர்த்தமென்ன.

விடை. பராபரனுடைய நாமந் தன்னிலே தானே அர்ச்சயசிஷ்ட நாமமாயிருக்கிறது. ஆனால் அது நம்மிடத்திலேயும் அர்ச்சிக்கப்படவேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடுகிறோம்.

வினா. அவருடைய நாமம் நம்மிடத்தில் அர்ச்சிக்கப்படுவதெப்படி.

விடை. பராபரனுடைய திருவசனந் தப்பிதமில்லாமல் நம்மிடத்தில் சுத்தமாய்ப் போதிக்கப்பட்டு நாம் அதின்படி பராபரனுடைய பிள்ளைகளுக்கொத்த ஞான நடக்கையாய் நடந்தால் அது தான் அவருடைய நாமம் அர்ச்சிக்கப்படுகிறதாயிருக்கும். தயையுள்ள பரமபிதாவே, நாங்கள் இப்படிச்செய்ய எங்களுக்கு ஒத்தாசை செய்தருளும். ஆனால் பராபரனுடைய திருவசனத்துக்கொத்திராதபடி போதிக்கிறவனும் நடக்கிறவனும் எவனோ அவன் நமக்குள் பராபரனுடைய நாமத்தை அர்ச்சிக்காமல் தூஷணிக்கிறான். தயையுள்ள பரமபிதாவே, நாங்கள் இப்படிச்செய்யாதபடிக்கு எங்களை காத்தருளும்.

௫௨௧. வினா. பராபரனுடைய நாமத்தை அர்ச்சிக்கிறதாவதென்ன.

விடை. தன்னில் தானே அர்ச்சயசிஷ்ட நாமமாயிருக்கிற பராபரனுடைய நாமத்தை அர்ச்சயசிஷ்ட நாமமாக எண்ணிக்கொண்டு நினைவுகளினாலும் வார்த்தைகளினாலுங் கிரியைகளினாலும் மிகுந்த சங்கையாய்ச் சங்கிக்கிறது தான் பராபரனுடைய நாமத்தை அர்ச்சிக்கிறதாம் (ருமோ. ௨௯,௧.௯).

௫௨௨. வினா. பராபரனுடைய நாமத்தை அர்ச்சிக்கிறவகையென்ன.

விடை. பராபரனுடைய திருவசனம் நம்மிடத்தில் சுத்தமாய்ப்போதிக்கப்பட்டு (சங்கீ. ௨௯, ௨; மல்கி. ௪, ௰௧; சங்கீ. ௭௨, ௰௭—௰௯), நாம் அதினால் குணப்பட்டு விசுவாசித்து அதினபடி பராபரனுடைய பிள்ளைகளுக்கொத்த ஞானநடத்தையாய் நடந்தால் பராபரனுடைய நாமத்தை நம்மிடத்திலும் நமக்குள்ளேயும் நம்மாலேயும் அர்ச்சிக்கப்படப்பண்ணுகிறோம் (மத். ௫, ௰௬; ௧ பேது. ௩, ௰௪—௰௬). நம்முடைய பிதாவாகிய பராபரன் இப்படிச்செய்ய நமக்கு ஒத்தாசைபண்ணவேண்டுமென்று இந்த மன்றாட்டில் வேண்டிக்கொள்ளுகிறோம்.

௫௨௩. வினா. பராபரனுடைய நாமத்தை அர்ச்சிக்காமல் தூஷணிக்கிற வகையென்ன.

விடை. கர்த்தருடைய வசனத்துக்கு ஒத்திராததைப் போதிக்கிறவனும் நடக்கிறவனும் எவனோ அவன் நமக்குள் பராபரனுடைய நாமத்தை அர்ச்சிக்காமல் தூஷணிக்கிறான். ஆகையால் பராபரன் இதை விலக்கி இதுக்கு நம்மைக் காக்கும்படி இந்த மன்றாட்டில் அவரை வேண்டிக்கொள்ளுகிறோம் (ரோமா ௨, ௨௪; ௭சேக். ௩௬, ௨௨. ௨௩).

௫௨௪. வினா. இந்த மன்றாட்டினபடி நமது கடமையென்ன.

விடை. நாஞ் சகல காரியங்களிலும் பராபரனுடைய சங்கையைத்தேடி நம்முடைய கிரியைகளையெல்லாம் அவருக்குத் தோத்திரமுண்டாகச் செய்யவேண்டும். மேலும் அவர் லோகமெங்குஞ் சகல மனிதராலும் அறியப்படும்படிக்குஞ் சங்கிக்கப்படும்படிக்கும் பிரயாசப்படவேண்டும்.

இரண்டாம் மன்றாட்டைப்பற்றியது.

வினா. இரண்டாம் மன்றாட்டென்ன.

விடை. உம்முடைய இராச்சியம் வருவதாக.

வினா. நாம் இப்படி மன்றாடுவதற்கர்த்தமென்ன.

விடை. பராபரனுடைய இராச்சியம் நம்முடைய மன்றாட்டில்லாமல் வரும். ஆனால் அது நம்மிடத்தி லேயும் வரவேண்டுமென்று இந்த மன்றாட்டில் மன்றாடு கிறோம்.

வினா. அவருடைய இராச்சியம் நம்மிடத்திலே வரு வதெப்படி.

விடை. நாம் அவருடைய கிருபையினால் அவரு டைய பரிசுத்த வசனத்தை விசுவாசித்து இம்மையி லும் மறுமையிலுந் தேவசாயலாய்ப் பிழைத்து நடக்கப் பரமபிதா தமது பரிசுத்த ஆவியை நமக்குக் கொடுத் தால் அவருடைய இராச்சியம் நம்மிடத்தில் வரும்.

௫௨௫. வினா. நாம் இந்த மன்றாட்டில் என்னமன்றாடுகி றோம்.

விடை. பராபரனுடைய இராச்சியம் வரவேண்டுமென் றும் பிசாசின் இராச்சியம் நிர்மூலமாக வேண்டுமென்றும் நாமிதில் மன்றாடுகிறோம்.

௫௨௬. வினா. பராபரனுடைய இராச்சியம் எத்தனை விதம்.

விடை. மூன்று விதம். அதாவது, வல்லமையின் இராச்சியமுங் கிருபையின இராச்சியமும் மகிமையின இராச் சியமுமாம்.

௫௨௭. வினா. நாம் இந்த மன்றாட்டில் எந்த இராச்சியம் வரவேண்டுமென்று மன்றாடுகிறோம்.

விடை. நாம் எல்லாருங் கீழ்ப்பட்டிருக்கிற வல்லமை யின் இராச்சியம் வரத்தேவை இல்லை. கிருபையின் இராச் சியமும் மகிமையின் இராச்சியமும் வரவேண்டுமென்று இந்த மன்றாட்டில் மன்றாடுகிறோம்.

௫௨௮. வினா. நாம் கிருபையின் இராச்சியம் வரவேண்டு மென்று எப்படி மன்றாடுகிறோம்.

விடை. பராபரன் தேவவசனமும் ஞானத்திரவியங் களுமாகிய கிருபையின் எத்தனங்களைக் கிருபையின் இராச் சியமாகிய தமது திருச்சபையில் கையாடப்படச் செய்து க) லோகமெங்கும் திருச்சபைக்குப் புறம்பே இருக்கிற அஞ்ஞா னிகளையும் மோசத்திற்கு ஏதுவாய் அலைந்து திரிகிற மற்ற அவிசுவாசிகளையும் அதில் உட்சேர்க்கவேண்டுமென்றும் (ஏசா. ௫௫, ௰. ௰௧),

௨) திருச்சபையில் உட்பட்டிருக்கிற எல்லாருக்குந் தம்முடைய பரிசுத்த ஆவியைத்தந்து அவர்களை விசுவாசிகளாக்கி விசுவாசிகளை எல்லாச்சத்துருக்களுக்கும் மோசங்களுக்குங் காப்பாற்றிக் கிருபையின் இராச்சியத்திற்கடுத்த நன்மைகளை எல்லாம் அவர்களுக்குப் பலிக்கப்பண்ணவேண்டுமென்றும் மன்றாடுகிறோம் (மத். ௯, ௩௭. ௩௮; சங்கீ. ௭௨, ௮—௰௧; லூக். ௰௧, ௨௰—௨௨; ரோமா ௰௪, ௰௭. ௰௮; ௨ தெசலோ. ௧, ௰௧. ௰௨).

௫௨௯. வினா. நாம் மகிமையின் இராச்சியம் வரவேண்டுமென்று எப்படி மன்றாடுகிறோம்.

விடை. பராபரன் தம்மை விசுவாசிக்கிறவர்களிடத்தில் உண்டாயிருக்கிற விசுவாசத்தை முடிவுமட்டுங் காக்கவேண்டுமென்றுங் கடைசியில் அவர்களுக்குப் பாக்கியமான மரணத்தை வரப்பண்ணி அதின் வழியாய் அவர்களைத் தமது மோட்சஇராச்சியத்தில் ஏற்றுக்கொண்டு இந்த இராச்சியத்தின் மகிமையை வெளியாக்கவேண்டுமென்றும் மன்றாடுகிறோம் (ரோமர் ௮, ௰௮-௨௩; தீத்து ௨, ௰௩; ௨ தீமோ. ௪, ௮; அறிவி. ௨௨, ௨௰).

௫௩௰. வினா. கிறிஸ்துவின் இராச்சியத்திற்கு விரோதமாயிருக்கிறதென்ன.

விடை. பிசாசின் இராச்சியங் கிறிஸ்துவின் இராச்சியத்திற்கு விரோதமாயிருக்கிறது. பிசாசு இந்தலோகத்தின் தம்பிரானென்றும் அந்தகாரலோகாதிபதி என்றும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (எபேசி. ௨, ௨; ௬, ௰௨; ௨ கொரி. ௪, ௪).

௫௩௧. வினா. பிசாசின் இராச்சியமாவதென்ன.

விடை. அது பாவத்தின இராச்சியந்தான். அதிலிருக்கிறவர்கள் பாவத்தினால் பராபரனுக்கு விரோதமாயிருந்து பிசாசின் அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்கள் முடிவோ நரகம்.

௫௩௨. வினா. ஒருவன் பராபரனுடைய இராச்சியத்திலிருக்கிறானோ பிசாசின் இராச்சியத்திலிருக்கிறானோவென்பதை எப்படியறியலாம்.

விடை. ஒருவன் பாவத்துக்கு ஊழியஞ்செய்து பாவத்தில் சந்தோஷப்பட்டால் அவன் பிசாசின் இராச்சியத்திலிருக்கிறான் (௧ யோவா. ௩, ௮-௰; எபே. ௨, ௧). ஆனால் ஒருவன் பரிசுத்தஆவியினால் ஏவப்பட்டுக்கிறிஸ்துவின் உபதேசத்திற்குக கீழ்ப்படிந்திருந்தால் அவன் பராபரனுடைய

இராச்சியத்திலிருக்கிறான் (க தெசலோ. உ, ௰உ; எபிரே. ௰உ, உ௮).

௫௩௩. வினா. இந்த இரண்டாம் மன்றாட்டின்படி நமது கடமை என்ன.

விடை. நம்மிடத்திலும் மற்றவர்களிடத்திலும் பிசாசின இராசசியம் நிர்மூலமாகவும் நமக்குள்ளும் மற்றவர்களுக்குள்ளும் பராபரனுடைய இராச்சியம் வரவும் பிரயாசப் படவேண்டும்.

மூன்றும் மன்றாட்டைப்பற்றியது.

வினா. மூன்றாம் மன்றாட்டென்ன.

விடை, உமமுடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக.

வினா. நாம் இப்படி மன்றாடுவதற்கர்த்தமென்ன.

விடை. பராபரனுடைய நன்மையுங் கிருபையுமுள்ள சித்தம் நமமுடைய மன்றாட்டில்லாமல செய்யப்படும். ஆனால் அது நம்மிடத்திலுஞ செய்யப் படவேண்டுமென்று இந்த மனறாட்டிலே மன்றாடுகிறோம்.

வினா. அவருடைய சித்தம் நம்மிடத்தில் செய்யப் படுவதெப்படி.

விடை. பராபரன் தம்முடைய நாமம் அர்ச்சிக்கப் படவுந தமமுடைய இராச்சியம் வரவும் ஒட்டாதிருக்கிற பிசாசு லோகம் மாமிசமென்றவைகளின் துர் ஆலோசனையையுஞ சித்தத்தையும மறுதது தத்தடுத்து நம்மைத் தம்முடைய வசனத்திலேயும் விசுவாசத்திலேயும் மரணபரியந்தம் திடப்படுத்திக் காப்பாற்றினால் அவருடைய நன்மையுங் கிருபையுமுள்ள சித்தம் நம்மிடத்தில் செய்யப்படும்.

௫௩௪. வினா. நாம் இந்தமன்றாட்டில் என்ன மன்றாடுகிறோம்.

விடை. பிசாசின் சித்தமும் லோகத்தின் சித்தமும் மாமிசத்தின் சித்தமுமல்ல, பராபரனுடைய சித்தமாத்திரஞ் செய்யப்படவேண்டுமென்று நாம் இந்த மன்றாட்டில் மன்றாடுகிறோம்.

௫௩௫. வினா. பராபரனுடைய சித்தமாவதென்ன.

விடை. பராபரன் நியாயப்பிரமாணத்தினாலுஞ் சுவிசேஷத்தினாலும் நமக்கு வெளிப்படுத்தினதெதுவோ அதுவே அவருடைய சித்தம். நாம் எப்படி பரிசுத்த நடக்கையாய் நடக்கவேண்டுமென்று நியாயப்பிரமாணத்தைக்கொண்டு நமக்குக் கற்பித்திருக்கிறார் (க தெசலோ. ௪, ௩). நாம் எப்படி இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய கிருபையினால் கரையேறலாமென்று சுவிசேஷத்தினால நமக்கு விளங்கப் பண்ணினார் (யோவா. ௬, ௩௯. ௪0).

௫௩௬. வினா. பராபரனுடைய சித்தம் எப்படிக்கொத்த சித்தமாயிருக்கிறது.

விடை. அது எப்போதுங் கிருபையும் நன்மையுமுள்ள சித்தமாயிருக்கிறது. பராபரன் நன்மைசெய்யச் சித்தமாயிருக்கிறாரொழிய மற்றபடியலல. அவர் ஆக்கினைத்தீர்ப்புகளும் நல்லதாயிருக்கும்.

௫௩௭. வினா. பராபரனுடைய சித்தத்தைச் செய்யவேண்டியவர்களார்.

விடை. எல்லாமனிதருங் கர்த்தருடைய சித்தத்தின்படி செய்யக்கடமையுள்ளவர்கள். ஆனால் விசுவாசமுள்ளவர்கள்தான் அவருடைய சித்தத்தின்படி செய்ய சாமார்த்தியமுடையவர்கள். மனிதரையன்றி லோகத்திலுள்ள மற்ற வஸ்துக்களெல்லாந் தனனிலே பராபரனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

௫௩௮. வினா. பராபரனுடைய சித்தம் எந்தப்பிரகாரஞ் செய்யப்படவேண்டும்.

விடை. அது பரமண்டலத்தில் செய்யப்படுகிறது போல் பூமியிலேயுஞ் செய்யப்படவேண்டும். அதாவது, வானத்திலுள்ள சம்மனசுக்களும் மோட்சவாசிகளும் எந்தப்பிரகாரம் அவருடைய சித்தத்தைச் செய்கிறார்களோ அந்தப்பிரகாரம் பூமியிலுள்ள மனிதருஞ் செய்யவேண்டும் (சங்கீ. ௱௩, ௨0).

௫௩௯. வினா. பராபரனுடைய சித்தத்தைச் செய்கிறதற்கு ஏது உதவியாயிருக்கும்.

விடை. அவர் பிசாசு லோகம் மாமிசம் என்றவைகளின் சித்தத்தை மறுத்துத்தடுத்து (யாக். ௪, ௭; ௧ யோ. ௫, ௪; ரோமர் ௮, ௰௩), நம்மைத்தமது வசனத்திலும் விசுவாசத்திலுந் திடப்படுத்திக் காப்பாற்றுகிறதுதான் அவருடைய சித்தத்தைச்செய்கிறதற்கு உதவியாயிருக்கும் (௧ தெசலோ. ௫, ௨௩; ௨ தெசலோ. ௩, ௩; பிலிப். ௧, ௬).

௫௪௰. வினா. இந்த மன்றாட்டின்படி நமது கடமையென்ன.

விடை. ௧) நாம் பராபரனுடைய சித்தமேதென்று நன்றாய்ச் சோதித்தறிந்து அவர் நமக்குச்செய்யுங் கிருபையினால் அவருடைய சித்தத்தின்படி உத்தமபிரகாரம் நடக்கவேண்டும் (ரோம. ௰௨, ௨; எபே. ௫, ௰௯. ௰௭; ௧ பேது. ௪, ௰௨; எபிரே. ௰௩, ௨௧).

௨) சகல காரியங்களிலும் அவருடைய சித்தம் ஆகக்கடவதென்று சொல்லி அவர் நம்மை நடத்துகிற விதத்துக்காகச் சந்தோஷப்பட்டு அவர்கையில் இன்பத்தையுந் துன்பத்தையும் நல்ல மனதோடு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

௩) அவர் நமக்குவரப்பண்ணுகிற உபத்திரவங்கள் நல்லதென்று நினைத்து எப்போதும் ஒருகண்டசீராய் அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் (மத். ௨௬, ௩௯; எபிரே. ௰, ௩௫. ௩௬; ௧ சாமு. ௩, ௰௮).

நாலாம் மன்றாட்டைப்பற்றியது.

வினா. நாலாம் மன்றாட்டென்ன.

விடை. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கின்றுதாரும்.

வினா. நாம் இப்படி மன்றாடுவதற்கர்த்தமென்ன.

விடை. பராபரன் சகல மனிதருக்கும் பொல்லாதவர்களுக்குங்கூட அன்றன்று வேண்டிய அப்பத்தை நம்முடைய மன்றாட்டில்லாமற் கொடுத்துக்கொண்டு வருகிறார். ஆனால் நாம் நமது அன்றாடக அப்பத்தை அவர் கையிலிருந்து பெற்றுக்கொண்டு நன்றியறிதலோடு சாப்பிடுவதற்கான புத்தியை நமக்குத்தந்தருள வேண்டுமென்று இந்த மன்றாட்டிலே மன்றாடுகிறோம்.

வினு. அன்றன்றுள்ள அப்பமாவதென்ன.

விடை. அன்னம், பானம், வஸ்திரம், வீடுவாசல், நிலம், ஆடுமாடு, பணமுதலியவைகளும், பத்தியுள்ள சமுசாரம், பிள்ளைகள், பணிவிடைக்காரர்களும், உத்தமமும் உண்மையுமுள்ள அதிகாரிகளும், நல்ல ஆளுகையும், சமாதானமும், கால சௌக்கியமும், ஒடுக்க வணக்கமும், நற்சிநேக சம்பந்தமும், அயலகத்தாருறவும் இவைமுதலிய இச்சீவனுக்குத் தேவையானவைகளெல்லாம் நமது அன்றன்றுள்ள அப்பமென்று சொல்லப்படும்.

௫௪௧. வினு. நாம் இந்தமன்றாட்டில் பொதுவாய்க் கேட்கிறதென்ன.

விடை. நாம் இந்தலோகத்திலிருக்கும்வரைக்கும் நம்முடைய சரீரத்துக்குத் தேவையானதெல்லாவற்றையும் பராபரன் நமக்குக் கட்டளையிடவேண்டுமென்றும் அதெல்லாவற்றையும் நமக்குப் பிரயோசனமும் ஆசீர்வாதமுமாகப் பலிக்கப்பண்ணவேண்டுமென்றும் இந்த மன்றாட்டில் பொதுவாகக் கேட்கிறோம்.

௫௪௨. வினு. நாஞ் சரீரத்துக்கடுத்த நன்மைகளைப் பராபரனிடத்தில் எந்தப்பிரகாரங் கேட்கவேண்டியது.

விடை. நாம் பராபரனிடத்தில் சரீரத்துக்கடுத்த நன்மைகளைக் கேட்கும்போது உம்முடைய சித்தமாகக்கடவதென்றுந் தேவரீர் எங்களுக்கு நன்மையானது எம்மாத்திரமென்று அறிந்திருக்கிறீரோ அம்மாத்திரம் எங்களுக்குக் கொடுமென்றுங் கேட்கவேண்டியது (மத். ௮, ௨).

௫௪௩. வினு. சரீரத்துக்கடுத்த நன்மைகளை நமக்குக்கொடுக்கிறவரார்.

விடை. பரமண்டலங்களிலிருக்கிற நமது பிதாவானவர்தான். அவர் நம்மை உண்டாக்கிப் பராமரித்து ஆண்டு நடத்துகிறார் (சங்கீ. ௩௭, ௰௮. ௰௧; ௱௪௫, ௰௫. ௰௬; நடபடி ௰௪, ௰௭; மத். ௬, ௩௩). அவருடைய ஆசீர்வாதத்தையல்லாமல் நம்முடைய பிரயாசத்தினால் நமக்கொன்றும் நன்மையாகாது (சங்கீ. ௱௨௭, ௧-௨; ௧ கொரி. ௩, ௭).

௫௪௪. வினு. பராபரன் ஆருக்கு அன்றன்றுள்ள அப்பத்தைக்கொடுக்கவேண்டுமென்று மன்றாடுகிறோம்.

விடை. நமக்கு மாத்திரமல்ல, நல்லவர்களும் பொல்லாதவர்களுமாகிய சகல மனிதருக்கும் விசேஷமாக ஞானமறுபிறப்பினால் நமக்குச் சகோதரராயிருக்கிறவர்களுக்கும் அதைக்கொடுக்கவேண்டுமென்று மன்றாடுகிறோம்.

௫௪௫. வினா. பராபரன் பொல்லாதவர்களுக்கும் அன்றாடகப் பிழைப்பைக் கட்டளையிடுகிறாரோ.

விடை. ஆம், பராபரன் அவர்களுக்கு எப்படிச் சீவனைக்கொடுத்தாரோ அப்படி அன்றாடகப் பிழைப்பையுங் கட்டளையிடுகிறார் (மத். ௫, ௪௫). நல்லவர்களுடைய மன்றாட்டு அதற்கு மிகுந்த உதவியாகும். பராபரன் பொல்லாதவர்களுக்குச் சரீரஉபகாரங்களைக் கட்டளையிடுகிற விசேஷித்த முகாந்தரமென்னவென்றால் அவர்கள் இவைகளினால் தம்மையறியும்படிக்கும் ஆத்தும நன்மைகளின்பேரில் ஆசைப்படும்படிக்குமே அவைகளை அவர்களுக்குக் கட்டளையிடுகிறார் (நடபடி ௰௪, ௰௭).

௫௪௬. வினா. நல்லவர்களும் பொல்லாதவர்களுஞ் சரீரநன்மைகளை ஒரே விதமாய் ஏற்றுக்கொள்ளுகிறார்களோ.

விடை. இல்லை. நல்லவர்கள் எல்லாவற்றையும் நன்றியறிந்த மனதோடு ஏற்றுக்கொண்டு அது பராபரனுடைய உபகாரமென்றறிந்து அவரை ஸ்தோத்திரிப்பார்கள். ஆனதினால் எல்லாம் அவர்கள் சரீரத்திற்குப் பிரயோசனமாகமாத்திரமல்ல அவர்கள் ஆத்துமத்துக்கும் ஆசீர்வாதமாகும் (௧ தீமோ. ௪, ௪; ௧ கொரி. ௰, ௩௧). பொல்லாதவர்கள் எல்லாவற்றையும் நன்றியற்ற மனதோடு ஏற்றுக்கொண்டு அவைகள் பராபரனால் வருகிறதென்று விசுவாசியாமல் தங்கள் பிரயாசத்தினாலும் அதிஷ்டத்தினாலும் வந்ததென்று நினைக்கிறார்கள். ஆனதினால் அவைகளெல்லாம் அவர்களுக்குப் பாவமாகவுஞ் சாபமாகவும் பலிக்கிறது (எரே. ௫, ௨௩. ௨௪; ஓசே. ௨, ௮; ஆகாய் ௧, ௫. ௯).

௫௪௭. வினா. நல்லவர்கள் சரீரப்பிழைப்பை எப்படித்தேடவேண்டும்.

விடை. சரீரப்பிழைப்பெல்லாம் பராபரன் கட்டளையிடுகிற ஆசீர்வாதம். ஆயினுந் தேவகற்பனையின்படி பிரயாசப்பட்டு வேலைசெய்து முகத்தின் வேர்வையினால் பிழைப்பைத்தேடவேண்டும் (௧ மோ. ௩, ௰௯; சங்கீ. ௱௨௭, ௧. ௨; வாக. ௰, ௨௨).

௫௪௮. வினா. அப்பமென்கிற வார்த்தைக்கு அர்த்தமென்ன.

விடை. சரீர சீவனுக்குத் தேவையாயிருக்கிற யாவும் அப்பமென்கிற வார்த்தையிலடங்கியிருக்கிறது.

௫௪௧. வினா. நாம் எங்கள் அப்பமென்று சொல்லுவானேன்.

விடை. நாம் அநுபவிக்கிற சொத்துக்கள் மற்றவர்களிடத்தில் அநியாயமாய்ச் சம்பாதித்ததாயிராமல் நியாயப்படி தேடினதுகளாயிருக்கிறதென்று காண்பிக்க எங்கள் அப்பமென்று சொல்லுகிறோம் (௨ தெசலோ. ௩, ௰௨).

௫௫௰. வினா. அது அன்றன்றுள்ள அப்பமென்று சொல்லப்படுகிற முகாந்தரமென்ன.

விடை. நாம் பராபரனிடத்தில் அநேக வருஷங்களுக்குத் தேவையானவைகளைக் கேளாமல் அன்றன்று நமக்குத் தேவையானதைமாத்திரங் கேட்கவேண்டிய முகாந்தரத்தை முன்னிட்டு அது அன்றன்றுள்ள அப்பமென்று சொல்லப்படும் (௧ திமோ. ௬, ௮).

௫௫௧. வினா. பராபரன் அதை நமக்கு எப்போது கொடுக்கவேண்டும்.

விடை. அதை இன்றுதாருமென்று மன்றாடுகிறோம். நமக்குத்தேவையான பிழைப்பு இன்றைக்கு அகப்பட்டால் போதும். மறுநாளை வரப்பண்ணுகிறவர் அன்றைக்குத் தேவையான பிழைப்பையும் நமக்குக் கட்டளையிடுவாரென்று நம்பி மறுநாளில் திரும்பவும் அவரை அதுக்காக வேண்டிக்கொள்ள வேண்டும் (மத். ௬, ௩௪).

௫௫௨. வினா. இந்த மன்றாட்டின்படி நமது கடமை என்ன.

விடை. ௧) நாம் நம்மைத்தானே நடத்தக்கூடாதென்றும் பெரியவர்களுஞ் சிறியவர்களுமாகிய யாவரும் பிச்சைக்காரரைப்போல் பராபரன் கையில் தங்களுக்குவேண்டிய பிழைப்பைக் கேட்கவேண்டுமென்றுந் தாழ்மையாயறிக்கையிடக்கடவோம் (சங்கீ. ௱௪, ௨௭. ௨௮).

௨) நாம் புசிக்கிறதிலுங் குடிக்கிறதிலும் பிழைப்புக்கடுத்த எல்லாக்காரியங்களிலும் மிதமிஞ்சிச் செலவுபண்ணாமல் மட்டாய்ச்செலவுபண்ணப் பழகக்கடவோம் (௧ திமோ. ௬, ௬. ௭).

௩) எல்லாம் பராபரனுடைய ஆசீர்வாதத்தினால் வருகிறதென்று நினைத்துச் சரீரப்பிழைப்புக்கான கவலைகளையெல்லாம் விட்டுவிட்டுப் பராபரன் நமக்காகப் பராமரிப்பாயிருக்கிறாரென்றும் நமக்குத்தேவையான யாவையுந் கொடுப்பாரென்றும் முழுமனதாலும் நம்பக்கடவோம் (மத். ௬, [illegible]. ௩௨).

ச) கர்த்தர் நமக்குக்கட்டளையிட்ட வேலையைச் சகல உண்மையுடனே செய்யக்கடவோம் (க தெசலோ. ௪, ௰க. ௰௨).

ரு) நாம் நமது பிரயாசத்தால் பிழைக்கும்படிக்கு பார்க்கவேண்டியதுந் தவிர மற்றவர்களும் பிழைக்க உதவியாயிருக்கவேண்டும் (க மோ. ரு, ௰சு; க பேது. ௪, ௰).

ஐந்தாம் மன்றாட்டைப்பற்றியது.

விஞ. ஐந்தாம் மன்றாட்டென்ன.

விடை. எங்கள் கடன்காரருக்கு நாங்கள் மன்னித்து விடுகிறதுபோல் நீரும் எங்கள் பாவக்கடன்களை எங்களுக்கு மன்னித்துவிடும்.

விஞ. இதற்கர்த்தமென்ன.

விடை. பரமண்டலங்களிலிருக்கிற பிதா நமது பாவங்களைப் பாராமலும் அவைகளினிமித்தம் நமது மன்றாட்டுகளை அல்லத்தட்டாமலும் எல்லாவற்றையுங் கிருபையாய்க் கொடுத்தருளவேண்டுமென்று இந்த மன்றாட்டில் மன்றாடுகிறோம். ஏனெனில் நாங் கேட்கிற மன்றாட்டுகளில் யாதொன்றுக்கும் பாத்திரராயிராமலும் அதற்குப்பாத்திரமான கிரியைகளைச் செய்யாமலும் அநுதினமும் மிகுதியாயப் பாவங்களைச்செய்து ஆக்கினைக்குமாத்திரம் பாத்திரராயிருக்கிறோம். ஆகிலும் நாமும் அந்தப்படி நமக்குப்பொல்லாங்கு செய்கிறவர்களை முழு மனதோடு மன்னித்துக்கொண்டு சந்தோஷத்துடனே அவர்களுக்கு நன்மைசெய்யச் சித்தமாயிருக்கிறோம்.

ருருரு. விஞ. இந்த மன்றாட்டின்படி பராபரன் நமக்கு மன்னிக்கவேண்டிய கடன்களாவதென்ன.

விடை. அவர் நமக்கு மன்னிக்கவேண்டிய கடன்கள் நம்முடைய பாவங்கள்தான்.

ருருசு. விஞ. பராபரன் பாவங்களை ஆருக்கு மன்னிக்க மன்றாடுகிறோம்.

விடை. அவர் நமக்கும் மற்ற மனிசர் யாவருக்கும் பாவங்களை மன்னிக்க மன்றாடுகிறோம். ஏனெனில் மனிதர்

எல்லாரும் பாவிகளாயிருக்கிறார்கள். ஆனால் மனஸ்தாபப் படுகிற பாவிகளுக்குமாத்திரம் பாவமன்னிப்புக் கிடைக்கும் (சங்கீ. ௩௨, ௫; யாக். ௫, ௰௪. ௰௫).

௫௫௫. வினா. பராபரன் பொல்லாதவர்களுக்கும் பாவங்களை மன்னிக்க நாம் மன்றாடவேண்டுமா.

விடை. ஆம், மன்றாடவேண்டும். ஆனால் அவர்கள் பாவ மன்னிப்பையடையும்படிக்குப் பராபரன் அவர்கள் மனதைத் திருப்பவேண்டுமென்று விசேஷமாய் மன்றாடவேண்டும். மேலும் நமக்குப் பொல்லாப்புச் செய்கிறவர்களுக்காகவும் மன்றாடிப் பராபரன் அவர்களுக்கு ஆக்கினையிடாமலுஞ் சரிக்குச்சரிக்கட்டாமலும் அவர்கள் மனதைத் திருப்பி எல்லாவற்றையும் அவர்களுக்கு மன்னிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம் (மத். ௫, ௪௪; லூக். ௨௩, ௩௪; நடபடி ௭, ௬௰).

௫௫௬. வினா. நாம் ஆரிடத்தில் பாவமன்னிப்பைக் கேட்கவேண்டும்.

விடை. திரியேக பராபரன் மாத்திரம் நமது பாவங்களை மன்னிக்க வல்லமையுள்ளவராயிருக்கிறதினால் அவரிடத்தில்மாத்திரம் பாவமன்னிப்பைக் கேட்கவேண்டும். அவரோ தமது உக்கிராணக்காரரைக்கொண்டும் நமது பாவங்களை மன்னிக்கிறார் (எரே. ௩௧, ௩௪; மிகா. ௭, ௰௮. ௰௯; யோவா. ௨௰, ௨௩).

௫௫௭. வினா. நாம் நமதுபேரில் அநேக பாவங்களைக்குவித்துக்கொண்டபிற்பாடு அதுகளை எப்படி நீக்கிப்போடலாம்.

விடை. நாம் அநதந்தக் கிரியைகளைச்செய்கிறதினால் ஒரு பாவத்தையும் நீக்கிப்போடக்கூடாது. பராபரன் எல்லாவற்றையும் நமக்குக்கிருபையாய் மன்னிக்கவேண்டும் (தானி. ௯, ௰௮).

௫௫௮. வினா. நாம் இந்தப்பாவமன்னிப்புக்குப் பாத்திரவான்களா.

விடை. நம்மால் நாம் அதற்கு அபாத்திரர். ஆனால் இயேசுகிறிஸ்து பாவங்களை மன்னிக்கிறதற்கான கிருபையை நமக்குச் சம்பாதித்தபடியால் பராபரன் அவர் நிமித்தம் நமது பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார் (௧ யோவா. ௨, ௰௨).

௫௫௯. வினா. பாவங்கள் நமக்கு எப்படிமன்னிக்கப்படும்.

விடை. அதுகள் நமக்குப்பலிக்காதபடிக்கும் பராபரன் அதுகளை ஒருக்காலும் நினையாமல் அதுகளுக்கு வரவேண்டிய ஆக்கினையை வரப்பண்ணாதபடிக்கும் அதுகள் நமக்கு மன்னிக்கப்படும் (ரோமா. ௪, ௬—௮; சங்கீ. ௫௧, ௰; எரே. ௫௰, ௨௰).

௫௬௰. வினா. பராபரன் நமது பாவங்களை மன்னிக்கிறபடியால் நாம் அவருக்குக்கொடுக்கிறவார்த்தைப்பாடென்ன.

விடை. நாங்கள் எங்கள் கடன்காரருக்கு மன்னித்துவிடுகிறோமென்று வார்த்தைப்பாடுகொடுக்கிறோம்.

௫௬௧. வினா. நமது கடன்காரரார்.

விடை. நமக்கு அநியாயஞ்செய்து பொல்லாப்புச்செய்கிறவர்களெல்லாரும் நம்முடைய கடன்காரராம். அவர்கள் நமக்கு எவ்வளவுபெரிய குற்றங்களைச்செய்தாலும் அவைகளை அவர்களுக்கு மன்னிக்கவேண்டும் (மத். ௰௮, ௨௧. ௨௨).

௫௬௨. வினா. அவர்களுக்கு எப்படி மன்னிக்கவேண்டும்.

விடை. ௧) இனிச் சரிக்குச்சரிக்கட்டுவோமென்கிற எண்ணத்தை மனதில்வைக்காமல் முழு மனதோடும் அவர்களுக்கு மன்னிக்கவேண்டும்.

௨) அவர்கள் நமக்குச்செய்த பொல்லாப்புக்குப் பதிலாய் நன்மைசெய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும்.

௫௬௩. வினா. நாம் ஏன அவர்களுக்கு மன்னிக்கவேண்டும்.

விடை. பராபரன் அநுதினமும் நமக்கு அநேககுற்றங்களை மன்னிக்கிறதினால் நாம் நமது கடன்காரருக்கு மன்னியாவிட்டால் அவர் நமக்கு மன்னிக்கமாட்டார். ஆதலால் நாம் எல்லாருக்கும் நல்ல மனதோடே மன்னிக்கவேண்டும் (கொலோ. ௩, ௰௩; மத். ௰௮, ௩௨-௩௫; ௬, ௰௪. ௰௫).

௫௬௪. வினா. இந்த ஐந்தாம் மன்றாட்டின்படி நமது கடமை என்ன.

விடை. ௧) நமக்கு இன்னும் அநேகபாவங்களுண்டென்றும் பாவம் மிகவுமபெரிய பொல்லாபபென்றும் பாவத்திற்காக மிகுந்ததண்டனைக்குப் பாத்திரராயிருக்கிறோமென்றும் நினைத்துப் பாவமன்னிப்பையடையப் பிரயாசப்படவேண்டும்.

௨) அறிந்த பாவங்களை மிகவும் அருவருத்து அதுகளைத்திரும்பத்திரும்பச் செய்யாமல் சகல பாவங்களுக்கும் விலக்கமாய நம்மைக் காக்கவேண்டியது.

௩) பராபரன் நமது குற்றங்களை மன்னிக்கிறதுபோல் நாமும் மற்றவர்கள் குற்றங்களை மன்னிக்கவேண்டும்.

ஆறும் மன்றாட்டைப்பற்றியது.

வினா. ஆறும் மன்றாட்டென்ன.

விடை. எங்களைச்சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாதிரும்.

வினா. இதற்கர்த்தமென்ன.

விடை. பராபரன் ஒருவனையுஞ் சோதிக்கிறதில்லை. ஆனால் பிசாசு லோகம் மாமிசம் என்றவைகள் அவிசுவாசம் அவநம்பிக்கை முதலான கனபாவதோஷங்களிலேயுந் துன்மார்க்கங்களிலேயும் நம்மை உட்படுத்தி மோசம் போக்காதபடிக்கும் நாம் அவைகளால் எவ்வளவாய்ச சோதிக்கப்பட்டாலும் வெல்லப்படாமல் முடிய அவைகளைச்செயிக்கும்படிக்கும் அவர் நம்மைக் காத்து நடத்தவேண்டுமென்று இந்தமன்றாட்டில் மன்றாடுகிறோம்.

௫௬௫. வினா. நாம் இந்த மன்றாட்டில் எனதை விலக்க மன்றாடுகிறோம்.

விடை. சோதனையை விலக்க மன்றாடுகிறோம்.

௫௬௬. வினா. சோதனை எத்தனை விதம்.

விடை. இரண்டுவிதம். பராபரன் நம்மைச்சோதிக்கிற ஒரு நல்லசோதனையும் பிசாசு லோகம் மாமிசமென்றவைகள் நம்மைச்சோதிக்கிற ஒரு பொல்லாத சோதனையுமுண்டு (அறிவி. ௨, ௰; யாக். ௧, ௰௩).

௫௬௭. வினா. பராபரன் நம்மைப்பொல்லாப்புக்குச் சோதிக்கிறதில்லையோ.

விடை. அவர் நம்மைப்பொல்லாப்புக்குச் சோதிக்கிறவரல்ல. அவர் நமது நன்மைக்காகச சோதிக்கிறார். இப்படிக்கொத்த சோதனையினால் நமது விசுவாசத்தையும் நாம் அவருக்குக்கீழ்ப்படிகிற உண்மையையும் விளங்கப்பண்ணவேண்டுமென்றிருக்கிறார் (யாக். ௧, ௰௩. ௰௪; ௫ மோ. ௮, ௨. ௩).

௫௬௮. வினா. அவர் நம்மைச்சோதிக்கிறதெப்படி.

விடை. அவர் நம்மைப்பலவிதமாய்ச் சோதிக்கிறார்.

௧) அவர் நமக்குப்பலவித உபகாரங்கள் செய்து நாம் அவைகளை நன்றியறிந்த மனதோடே ஏற்றுக்கொண்டு அநுபவிக்கிறோமாவென்று பார்க்கிறார் (௫ மோ. ௰௬, ௪; ௫ மோ. ௮, ௨. ௩).

௨) அவர் நமக்கு அந்தந்தக் கற்பனைகளைக்கொடுத்து நாம் அவைகளுக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோமாவென்று பார்க்கிறார் (௧ மோசே ௨௨, ௨; ௨ மோசே ௨௰, ௨௰).

௩) நன்மைசெய்கிறதற்கான சமயங்களை வரப்பண்ணி நன்மைசெய்கிறோமாவென்று பார்க்கிறார் (யாக். ௧, ௨. ௩).

௪) பாவஞ்செய்கிறதற்கான சமயங்களை வரப்பண்ணி அவைகளுக்கெதிர்த்து நிற்காமல் பாவஞ்செய்கிறோமாவென்றுபார்க்கிறார் (நியா. ௨, ௨௧. ௨௨; ௨ நாளாக. ௩௨, ௩௧; ௫ மோ. ௰௩, ௩).

௫, நமக்குப்பலவித உபத்திரவங்களை வரப்பண்ணி எல்லாவற்றையும் பொறுமையாய்ச் சகிக்கிறோமாவென்று நம்மைச்சோதிக்கிறார் (௧ பேது. ௪, ௰௨; சங்கீ. ௬௬, ௰).

௫௬௯. வினா. பராபரன் நம்மைச்சோதிக்கிறதற்கு முன்னே நமது உள்ளிந்திரியங்களிலிருக்கிற எல்லாவற்றையும் அறிந்திருக்கிறதில்லையா.

விடை. ஆம், அவர் அறிந்திருக்கிறார். ஆனால் அது நமக்கும் மற்றவர்களுக்கும் அறியப்படும்படிக்கு நம்மைச் சோதிக்கிறார் (யோவா. ௬, ௬).

௫௭௰. வினா. பொல்லாத சோதனை நமக்கு ஆரால் வரும்.

விடை. அது பிசாசினாலும் லோகத்தினாலும் நமது மாமிசத்தினாலும் வரும்.

௫௭௧. வினா. பராபரன் இந்தப்பொல்லாத சோதனைக்குக் காரணரென்று சொல்லலாமோ.

விடை. சொல்லக்கூடாது. பராபரன் நல்லவராயிருக்கிறதால் அவரால் பொல்லாப்பொன்றும வராது. ஆனால் அந்தந்த நல்ல முகாந்தரங்களினால் பொல்லாத சோதனைகள் வர இடங்கொடுத்து தமக்குப்பயந்து நடக்கிறவர்கள் இப்படிச்சோதிக்கப்படுகிறபோது அவர்களுக்குச்சகாயஞ்செய்து நன்றாய் எதிர்த்து நிற்கிறதற்கான பெலனைக்கட்டளையிடுகிறார் (யோபு ௧, ௰௨; ௨, ௬; ௧ கொரி. ௰, ௰௩).

௫௭௨. வினா. பிரதான சோதனைக்காரனார்.

விடை. பிசாசு தான் பிரதான சோதனைக்காரன் (மத். ௪, ௩; எபேசி. ௬, ௰௨).

௫௭௩. வினா. பிசாசு நம்மை எத்தனை விதமாய்ச் சோதிக்கிறது.

விடை. இரண்டுவிதமாய்ச் சோதிக்கிறது. ௧) நமது இருதயத்தில் அந்தந்தப் பொல்லாத நினைவுகளை உண்டாக்கி ஆகாத ஆசைஇச்சைகளைக் கிளம்பப்பண்ணுகிறது (எபேசி. ௬, ௰௬; ௧ நாளாக. ௨௧, ௧; யோவா. ௰௩, ௨).

௨) தனக்குச் சார்பானவர்களைக்கொண்டு நம்மைப் பலவிதமாய் மோசம்போக்குகிறது (௧ இரா. ௨௨, ௨௨).

௫௭௪. வினா. நம்மைச்சோதிக்கிற லோகமும் அதின் சோதனையுமென்ன.

விடை. ௧) பொல்லாப்புச்செய்கிற மனிதரெல்லாரும் நம்மைச்சோதிக்கிற லோகம் என்னப்படுவார்கள் (௧ யோவா. ௫, ௰௯).

௨) இவர்கள் பொல்லாப்புச்செய்ய நம்மைத்தூண்டிவிடுவார்கள் (௧ கொரி. ௰௫, ௩௩; வாக். ௧, ௰; ௧ யோவா. ௨, ௰௫).

௩) அதைச்செய்யும்படியான புத்தியைச் சொல்லுவார்கள். சம்மதப்படுத்துவார்கள். நமக்கு ஆவலாதி உண்டாகப்பிரயாசப்படுவார்கள். இதுதான் லோகத்தின் சோதனை (மத். ௰௮, ௭).

௫௭௫. வினா. நமது மாமிசம் நம்மைச்சோதிக்கிற சோதனையென்ன.

விடை. நமது மாமிசம் நமக்குள் பலவித ஆசைஇச்சைகளை உண்டாக்கி பிசாசின் சோதனைக்கும லோகத்தின் சோதனைக்குஞ் சம்மதிக்கிறது நமது மாமிசத்தின் சோதனையாம். இந்தச்சோதனை மிகவும் கெடுதியானது. ஏனெனில் இந்தச்சோதனையையல்லாமல பிசாசின் சோதனையும் லோகத்தின் சோதனையும் நமக்குச் சேதம்வரப்பண்ணாது (யாக். ௧, ௰௪. ௰௫; ௧ பேது. ௨, ௰௧).

௫௭௬. வினா. பிசாசு லோகம் மாமிசம் என்றவைகள் நம்மைச்சோதிக்கிற முகாந்தரமென்ன.

விடை. நாம் அவிசுவாசம் அவநம்பிக்கை முதலான கன பாவதோஷங்களுக்குந் துன்மார்க்கங்களுக்கும் உள்ளாகும்படி அதுகள் நம்மைச்சோதிக்கிறது.

௫௭௭. வினா. எந்தச்சோதனையை விலக்க மன்றாடுகிறோம்.

விடை. பராபரன் நமக்குப் பிரயோசனமுண்டாக வரப்பண்ணுகிற நல்லசோதனையையல்ல, பிசாசு லோகம் மா

பிசம் என்றவைகளால் *நமக்குக்கேடாக வருகிற சோதனையை விலக்க மன்றாடுகிறோம் (யாக். ௧, ௰௪).

௫௭௮. வினா. நமக்குப் பரிச்சேதமாய் ஒரு பொல்லாத சோதனையும் வராதிருக்க மன்றாடலாமோ.

விடை. மன்றாடக்கூடாது. இப்படி மன்றாடுகிறது பராபரனுடைய சித்தத்திற்கு ஏற்றதல்ல. நாம் எப்போதும் நமது ஆத்தும சத்துருக்களோடு போராடவேண்டுமென்று அவர் நமக்குக் கற்பித்து இந்தச்சத்துருக்களுடைய சோதனைகளெல்லாம் நமக்கு நன்மையாகும்படி பண்ணுகிறார்.

௫௭௯. வினா. அப்படியிருக்க நாம் இந்த மன்றாட்டில் மன்றாடுகிறதென்ன.

விடை. ௧) பராபரன் நமது பெலத்துக்கு மிஞ்சின சோதனைகளை நமக்கு வரப்பண்ணாமலும் (௧ கொரி. ௰, ௰௩),

௨) நாம் சோதனைகளில் கெட்டுப்போகவொட்டாமலும் (சங்கீ. ௰௭, ௫; ௨ தெச. ௩, ௩),

௩) சகல சோதனைகளையுஞ் செயிக்கிறதற்கான ஒத்தாசையை நமக்குச்செய்து அவைகளெல்லாம் நமக்குப் பிரயோசனமாயிருக்கும்படி பண்ணவேண்டுமென்றும் இந்த மன்றாட்டில் மன்றாடுகிறோம் (எபே. ௬, ௰௩; ௨ பேது. ௨, ௯; ௧ யோவா. ௫, ௪).

௫௮௰. வினா. இந்த மன்றாட்டின்படி நமது கடமை என்ன.

விடை. ௧) நாம் ஒருவருக்கும் பொல்லாத மாதிரி வைத்து ஒருவரையும் ஆவலாதிப்படுத்திப் பொல்லாப்பினால் சோதிக்காதபடிக்கு நம்மைக் காக்கவேண்டும்.

௨) நாம் இந்த லோகத்திலிருக்கிறவரையில் அநேக சத்துருக்களின் நடுவிலிருக்கிறோமென்பதையும் அநேகஞ்சோதனைகளினால் சூழப்பட்டிருக்கிறோமென்பதையும் நன்றாய் நினைத்துக் கருத்தாகப் பராபரனுடைய ஒத்தாசையைத் தேடவேண்டும் (மத். ௨௬, ௪௧).

௩) நாம் பராபரனைச் சோதிக்காமலும் நமது குற்றத்தினால் அந்தந்தச் சோதனைகளை நமக்கு வரப்பண்ணிக்கொள்ளாமலும் அதற்கு இடமான சமயங்களை விலக்கிச் சகல சாவதானத்தோடே நடக்கவேண்டும் (௧ கொரி. ௰, ௰௨).

௪) நமது ஆத்தும சத்துருக்களைச் செயங்கொள்ளுகிறதற்கான ஆயுதங்களைப் பிடித்துக்கொண்டு ஞானச்சேவகராக அநுதினமும் போராடி விசுவாசத்தின் போராட்டத்தைச் செம்மையாய் முடிக்கவேண்டும் (எபேசி. ௬, ௰. ௰௧. ௰௪—௰௮; ௧ பேது. ௫, ௮. ௯).

ஏழாம் மன்றாட்டைப்பற்றியது.

வினா. ஏழாம் மன்றாட்டென்ன.

விடை. தீமையிலிருந்து எங்களை இரட்சித்துக்கொள்ளும்.

வினா. இதற்கர்த்தமென்ன.

விடை. பரமண்டலங்களிலிருக்கிற பிதா ஆத்துமாவுக்குஞ் சரீரத்துக்கும் பொருட்களுக்குங் கனத்திற்கும் விக்கினமான எல்லாத்தீமைகளிலுமிருந்து நம்மை இரட்சித்து நாஞ் சாகும் நேரத்தில் நமக்குப்பாக்கியமான மரணத்தை யளித்து அழுகையின் பள்ளத்தாக்காகிய இந்த லோகத்திலிருந்து பரலோகத்தில் தம்மண்டைக்கு நம்மைக் கிருபையாய் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று எல்லாவற்றிற்குந் தொகுப்பாய் இந்தமன்றாட்டில் மன்றாடுகிறோம்.

௫௮௧. வினா. இந்த மன்றாட்டில் எனத்தை விலக்க மன்றாடுகிறோம்.

விடை. தீமை என்னப்பட்ட எல்லாவற்றையும் விலக்க மன்றாடுகிறோம்.

௫௮௨. வினா. தீமை எல்லாம் ஆரால் வருகிறது.

விடை. பிசாசினாலும் பாவத்தினாலுஞ் சகல தீமையும் வருகிறது.

௫௮௩. வினா. பாவத்தினால் நமக்கு ஆக்கினையாக வருகிற தீமை எத்தனைவிதம்.

விடை. மூன்றுவிதம். அதாவது, ஆத்தும தீமையுஞ் சரீரதீமையும் உடைமைக்குஞ் சங்கைக்குமடுத்த தீமைகளுமாம்.

௫௮௪. வினா. ஆத்தும தீமையாவதென்ன.

விடை. பாவத்தையல்லாமல் அதினால் வருங் கனமான சோதனைகளும் இளகாத மனதும் நிர்ப்பாக்கியமான மரணமும் நித்தியசாபமும் ஆத்துமதீமையாம்.

௫௮௫. வினா. சரீரதீமையாவதென்ன.

விடை. வியாதிகளும் நோக்காடுகளுங் குறைச்சல்களும் இக்கட்டுகளும் பிராணமோசங்களும் பசியுங் காவலுமாகிய இதுகளெல்லாஞ் சரீரதீமையாம்.

௫௬. வினா. உடைமைக்குஞ் சங்கைக்குமடுத்த தீமை யென்ன.

விடை. உடைமைகளின் சேதமுந் தரித்திரமும் நிந்தையுந் தூஷணமுமாகிய இதுகளெல்லாம் உடைமைக்குஞ் சங்கைக்குமடுத்த தீமைகளாம்.

௫௭. வினா. பராபரன் தம்முடைய பிள்ளைகளுக்கு இந்த லோகத்தில் இத்தனை தீமைகளை வரப்பண்ணுவானேன்.

விடை. அதற்கு அநேக முகாந்தரங்களுண்டு. ௧) நமது மாமிச இச்சையையும் பாவஆசையையும் மென்மேலுங் கீழ்ப்படுத்தத்தக்கதாக அதுகளை நமக்கு வரப்பண்ணுகிறார் (௨ கொரி. ௪, ௰௬; ௧ பேது. ௪, ௧. ௨; ௧ கொரி. ௰௧, ௩௨).

௨) இந்தலோகத்தை வெறுக்கத்தக்கதாகவும் பரம நன்மைகளின்மேல் அதிக ஆசைப்படத்தக்கதாகவும் அதுகளை நமக்கு வரப்பண்ணுகிறார் (ரோமர் ௮, ௨௨. ௨௩).

௩) பராபரன் அந்தந்தத் தீமைகளிலிருந்து நம்மை இரட்சிக்கிறதினால் தம்முடைய கிருபையையும் வல்லமையையும் நம்மிடத்தில் விளங்கப்பண்ணத்தக்கதாக அதுகளைநமக்கு வரப்பண்ணுகிறார் (யோவா. ௰௧, ௪; ௨ கொரி. ௧, ௮. ௯).

௪) விசுவாசமுஞ் சிநேகமும் பொறுதி நம்பிக்கையுந் தேவவசனத்தைக் கவனமுஞ் சுறுசுறுப்புமாய்க்கேட்டுச்செபம்பண்ணுகிறதும் இவைமுதலானது நம்மில் அதிகமதிகமாய் வர்த்திக்கத்தக்கதாக அதுகளை நமக்கு வரப்பண்ணுகிறார் (எபிரே. ௰௨, ௰௧; ௧ பேது. ௧, ௬. ௭: சங்கீ. ௱௰௯, ௭௧; ஏசா. ௨௬, ௰௬; ௨௮, ௰௯; ரோமர் ௫, ௩-௫).

௫) நாம் அநேகபாடுகளின்வழியாய் உன்னத நன்மைக்குப் பங்குள்ளவர்களாய்ப் போகவேண்டுமென்கிறதற்காக அதுகளை நமக்கு வரப்பண்ணுகிறார் (௨ கொரி. ௪, ௰௭. ௰௮; யாக். ௧, ௰௨).

௬) நம்மைத் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் ரூபுக்குச் சாயலாகும்படிக்கு அதுகளை நமக்கு வரப்பண்ணுகிறார் (ரோமர் ௮, ௨௯; ௧ பேது. ௨, ௨௧ ௨ கொரி. ௪, ௰). இந்த முகாந்தரங்களுக்காக நாம் இந்த லோகத்தில் இருக்கும்வரைக்கும் அநேகந் தீமைகளை அநுபவிக்கவேண்டியதாயிருக்கிறது (நடபடி ௰௪, ௨௨).

௫௮. வினா. பராபரனுக்குப்பயந்து நடக்கிற விசுவாசிகள் இந்தலோகத்தில் அந்தந்த தீமைகளை அநுபவிக்கிற போது அதை ஆக்கினையாக அனுபவிக்கிறார்களோ.

விடை. அவர்கள் கிறிஸ்துவின் பாரிசமாயிருந்து பராபரனுடைய கிருபையில் நிலைநிற்கிறபடியால் அவர்களுக்கு வருந் தீமையெல்லாந் தேவகோபத்தினால் வருகிற ஆக்கினையல்ல, அவருடைய பட்சத்தினால் வருகிற பிரயோசனமான தண்டனையாம் (எபிரே. ௰௨, ௯. ௰).

௫௮௯. வினா. பராபரனுடைய சித்தமல்லாமல் எந்தத்தீமையாகிலும் விசுவாசிகளுக்கு வருமோ.

விடை. வராது. அவர்களுக்கு இந்தலோகத்தில் சம்பவிக்கிற காரியங்களெல்லாம் பராபரனுடைய விசேஷித்த ஆலோசனையின்படி சம்பவிக்கிறது (மத். ௰, ௨௯. ௩௰).

௫௯௰. வினா. நமக்கு ஒரு தீமையும் வராதபடிக்கு மன்றாடலாமா.

விடை. பராபரன் தீமையிலிருந்து நம்மை இரட்சிக்க வேண்டுமென்று மன்றாடவேண்டுமேயொழிய நமக்கு ஒரு தீமையும்வராதபடிக்கு மன்றாடக்கூடாது (யோவா. ௰௭, ௰௫).

௫௯௧. வினா. பராபரன் நம்மைத் தீமையிலிருந்து எப்படி இரட்சிக்கிறார்.

விடை. ௧) பராபரன் சகல தீமையையுந் தமது ஆளுதலினால் நமக்கு லேசாக்கி அது நமது ஆத்துமத்துக்குச் சேதமாயிராதபடிக்கு அதை உத்தரிக்கத்தக்க பலத்தையுந் தைரியத்தையும் பொறுமையையும் நமக்குக் கட்டளையிடுகிறார் (௧ கொரி. ௧, ௬-௮; எபிரே. ௰, ௩௬; சங். ௯௪. ௰௯).

௨) அந்தந்தத் தீமைகளை அப்போதப்போது நீங்கிப் போகப்பண்ணுகிறார் (எரேமி. ௩௧, ௰௩; ௨ கொரி. ௧, ௰; சங். ௬௮, ௨௰. ௨௧). .

௩) கடைசியில் பாக்கியமான மரணத்தினால் நம்மை மோட்சத்தில் சேர்த்துச் சகல தீமைகளுக்கும் முடிவுண்டு பண்ணுகிறார் (௨ தீமோ. ௪, ௰௮). இவ்விதமாய் அவர் தீமையிலிருந்து நம்மை இரட்சிக்கிறார்.

௫௯௨. வினா. நாம் மரணமடைய மன்றாடலாமா.

விடை. பொறுமையில்லாமல் மரணத்தை விரும்புகிறது பெரிய பாவமாயிருக்கிறது. ஆனால் இந்தமரண சரீரத்துக்கு நீங்கலாகிக் கிறிஸ்துவண்டையிலிருக்கவேண்டுமென்கிற ஆசையினால் பராபரனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து பாக்கியமான மரணமடைய அதுதினமும் மன்றாடுவது விசுவாசிகளின் அடையாளம் (ரோமர் ௭, ௨௪; பிலிப். ௧, ௨௨-௨௪. ௨ கொரி. ௫, ௬-௯).

௫௯௩. வினா. இந்த மன்றாட்டின்படி நமது கடமை என்ன.

விடை. நாம் இந்த உலகத்தில் உயிரோடிருக்கிறது பாவத்தினிமித்தம் மிகுந்த நிர்ப்பாக்கியமென்றறிந்து இவ்வளவு தீமைகளோடு கலந்திருக்கிற இந்தலோககாரியங்களின்பேரில் ஆசைப்படாமலும் நமது நம்பிக்கையை அதுகளின்பேரில் வைக்காமலும் பராபரன் சகல தீமையிலுமிருந்து எப்படியும் நம்மை இரட்சிப்பாரென்று சந்தோஷமாய் எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டும்.

வினா. கர்த்தருடைய செபத்தை எந்தவார்த்தைகளினால் முடிக்கிறோம்.

விடை. அதேனென்றால் இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கென்றென்றைக்குமுண்டாயிருக்கிறது ஆமேன் என்கிறவார்த்தைகளினால்தான்.

௱௯௪. வினா. இந்தவார்த்தைகளுக்கர்த்தமென்ன.

விடை. ௧) பராபரன் நம்முடைய மன்றாட்டுகளை மெய்யாகவே கேட்பாரென்கிறதற்கு இந்தவார்த்தைகளினால் நமக்கு நிச்சயம் உண்டாகும். அதேனென்றால் அவருக்கு இராச்சியம் உண்டாயிருக்கிறது. நாம் அவருடைய இராச்சியத்தின் குடிகளாயிருக்கிறோம். அவருக்கு வல்லமையுண்டாயிருக்கிறது. இந்த வல்லமையின்படி நாங் கேட்கிறதெல்லாவற்றையும் அவர் நமக்குக் கொடுப்பார். அவருக்கு மகிமை உண்டாயிருக்கிறது. அவர் நமக்கு எவ்வளவு கொடுத்தாலும் அவருடைய மகிமை குறையாமல் மென்மேலும் விளங்கி நிற்கும். ௨) பராபரன் நம்முடைய மன்றாட்டுகளைக்கேட்கிற முகாந்தரங்களை இந்தவார்த்தைகளினால் வெளிப்படுத்தி நமக்காக அல்ல, தம்முடைய இராச்சியத்துக்கும் வல்லமைக்கும் மகிமையுண்டாக அவர் நம்முடைய மன்றாட்டுகளைக்கொடுத்தருளுவாரென்று நம்புகிறோம். ௩) அவர் நம்முடைய மன்றாட்டுகளைக் கேட்பாரென்று திடநம்பிக்கையாயிருந்து நாங் கேட்டதை அவர் கையில் வாங்குமுன் இந்த வார்த்தைகளினால் அவரை ஸ்தோத்திரிக்கவேண்டும் (எரேமி. ௩௩, ௩; சங்கீ. ௭௯, ௯).

௱௯௫. வினா. இந்த இராச்சியமும் வல்லமையும் மகிமையும் அவருக்கு எத்தனைகாலமுண்டாயிருக்கும்.

விடை. இந்த லோகத்திலுள்ள இராச்சியமும் வல்லமையும் மகிமையுமெல்லாம் முடிவடையும். ஆனால் பராபரனுடைய இராச்சியமும் வல்லமையும் மகிமையும் முடிவடையாமல் என்றென்றைக்கும் நிற்கும்.

வினா. ஆமேனென்கிற வார்த்தைக்கர்த்தமென்ன.

விடை. இந்த மன்றாட்டுகள் பரமண்டலங்களிலிருக்கிற பிதாவுக்குப் பொருந்தினவைகளென்றும் அவர் இவைகளைக்கேட்டுக் கொடுக்கிறாரென்றும் நாம் நிச்சயித்துக்கொள்ள ஆமேனென்கிற வார்த்தையைச்சொல்லுகிறோம். ஏனென்றால் நாம் இப்படி மன்றாட அவர் தாமே நமக்குக் கற்பித்து இந்த மன்றாட்டைக்கேட்டு அருளிச்செய்வோம் என்று வார்த்தைப்பாடுகொடுத்தார். ஆமேன் ஆமேனென்கிறது மெய்யாகவே மெய்யாகவே அப்படியாகுமென்பதாம்.

ருகக. வினா. பராபரன் நமது மன்றாட்டுகளைக் கேட்பாரென்று சந்தேகப்படாத நிச்சயமாய் அறிகிறதற்கான நியாயங்களென்ன.

விடை. க) இப்படி மன்றாடப் பராபரன் நமக்குக் கற்பித்தபடியினால் நாம் அவருடைய சித்தத்தின்படி எதைக் கேட்டாலும் அவரதை நமக்கு மறுக்காமல் கட்டளையிடுவாரென்பதற்குச் சந்தேகமில்லை (சங்கீ. உஎ, அ; ருய, யரு).

உ) உங்கள் மன்றாட்டுகளைக் கேட்போமென்று அவர் வார்த்தைப்பாடு கொடுத்திருப்பதினால் இந்த வார்த்தைப்பாட்டை ஒருக்காலும் தப்பாமல் நிறைவேற்றுவாரென்பதற்குச் சந்தேகமில்லை (ஏசா. சரு, உச; யோவா. யசு, உங; க யோவா. ரு, யச. யரு; லூக். யக; கூ-யங).

ங) நாம் யாதொன்றைக் கேட்கிறதற்குப் பாத்திரவான்களாயிராவிட்டாலுங் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் பரிசுத்தஆவியும் நமக்காக மன்றாடுகிற மன்றாட்டைக்கேட்டு அவர் எல்லாவற்றையும் நமக்குக்கொடுப்பாரென்பதற்குச் சந்தேகமில்லை (க யோவா. உ, க; ரோமர் அ, உசு).

ச) திருச்சபையின் பொதுவான மன்றாட்டு நமது மன்றாட்டுக்கு உதவியாயிருக்கிறதினால் பராபரன் அதைக் கேட்பாரெனபதற்குச் சந்தேகமில்லை (யாக். ரு, யசு; எபேசி. சு, யஅ; சங்கீ. சரு, உ).

ரு) பராபரன் இதற்கு முன்னே நமது மன்றாட்டையும் மற்றவர்களின் மன்றாட்டையுங் கேட்டுக்கட்டளையிட்டாரென்று நாம் அறிந்திருக்கிறபடியால் அவர் இனி எப்போதும் அதைக்கேட்பாரென்பதற்குச் சந்தேகமில்லை. (சங்கீ. உஉ, இ. சு).

௫௯௭. வினா. பராபரன் ஆருடைய மன்றாட்டைக்கேட்பார்.

விடை. அவர் தமக்குப்பயந்து நடக்கிற விசுவாசிகளின் மன்றாட்டைக்கேட்பாரொழிய (௧ யோவா. ௫, ௰௪), மனஸ்தாபமும் விசுவாசமுமற்ற பாவிகளின் மன்றாட்டுகளை கேட்கமாட்டார் (யோவா. ௯, ௩௧).

௫௯௮. வினா. பராபரன் விசுவாசிகளின் மன்றாட்டை உடனே கேட்டுக்கட்டளையிடுவாரோ.

விடை. அவர்கள் மன்றாட்டை உடனே கேட்பார் (தானி. ௯, ௨௩). ஆனால் அவர்களுக்குக்குறித்த ஒத்தாசையைச் சிலவிசை உடனே வரப்பண்ணாமல் தமது ஞானத்துக்குஞ் சிநேகத்துக்கும் ஒத்த பிரகாரமாய்த் தாமதம்பண்ணுகிறார் (ஆபகூக் ௨, ௩. ௪; ௨ கொரி. ௬, ௨; ௨ பேது. ௩, ௯). ஆகையால் நாம் இதையும் அதையுங் கேட்கிறபோது அவர் இப்படிச்செய்யவேண்டுமென்று அவருக்குச் சொல்லாமல் அவருடைய சித்தம் ஆகக்கடவதென்று சொல்லி அவர் ஒத்தாசைபண்ணும் நேரம் எப்போது வருமென்று பொறுமையாய்க் காத்திருக்கவேண்டும் (லூக். ௰௮, ௩; மத். ௨௬, ௩௯).

நாலாம் பங்கு.

ஞானஸ்நானக்கட்டளையைப்பற்றியது.

ருகூக. வினா. ஞானத்திரவியமாவதென்ன.

விடை. பராபரன் பூமிக்கடுத்த காணப்படுகிற அடையாளங்களினால் வானத்துக்கடுத்த காணப்படாத நன்மைகளை நமக்குக்கொடுக்கிற ஞான உபாயம் ஞானத்திரவியமென்று சொல்லப்படும.

கூா. வினா. ஞானத்திரவியத்தில் எத்தனை காரியங்களடங்கியிருக்கிறது.

விடை. இரண்டுகாரியங்கள் அடங்கியிருக்கிறது. க) பூமிக்கடுத்த காணப்படுகிற காரியமும், உ) வானத்துக்கடுத்த காணப்படாத காரியமுமாம்.

கூாக. வினா. ஞானத்திரவியங்களைக் கட்டளையிட்டவரார்.

விடை. ஞானத்திரவியங்களினால் தம்முடைய நன்மைகளை நமக்குக்கொடுக்கிறவராகிய பராபரன தாமே அதுகளைக்கட்டளையிட்டார்.

கூாஉ. வினா. பழையஏற்பாட்டின் காலத்தில் பராபரன் தம்முடைய சனமாகிய இஸ்ரவேலருக்கு எத்தனை ஞானத்திரவியங்களைக் கட்டளையிட்டாா.

விடை. பராபரன் பழையஏற்பாட்டின் காலத்தில் தம்முடைய சனமாகிய இஸ்ரவேலருக்கு இரண்டு ஞானத்திரவியங்களைக் கட்டளையிட்டார் (௧ மோசே ௰௭, ௭-௰௩; ரோமர் ௪, ௰௧). அதென்னவென்றால் விருத்தசேதனமும் பஷா ஆட்டுக்குட்டியுந்தான் (௨ மோசே ௰௨, ௩; எபிரே. ௰௧, ௨௮).

கூாங. வினா. புதியஏற்பாட்டில எத்தனை ஞானத்திரவியங்களுண்டு.

விடை. புதியஏற்பாட்டில் இரண்டு ஞானத்திரவியங்களுண்டு. அதென்னவென்றால் நமது கர்த்தாகிய இயேசுகிறிஸ்து விருத்தசேதனத்துக்குப் பதிலாக ஞானஸ்நானத்தையும் (௫ மோசே ௩௰, ௬; கலாத். ௫, ௨-௪; கொலோ. ௨, ௰௧. ௰௨), பஷா ஆட்டுக்குட்டிக்குப்பதிலாக இராப்போசனத்தையுந் தமது திருச்சபைக்குக கட்டளையிட்டார் (எபி. ௰௩, ௰; ௧ கொரி. ௫, ௭).

ஞானஸ்நானமின்னதென்பதைப் பற்றியது.

வினா. ஞானஸ்நானமாவதென்ன.

விடை. ஞானஸ்நானம் வெறுந் தண்ணீராயிராமல் அது பராபரனுடைய கற்பனையினால் ஸ்தாபிக்கப்பட்டதும் அவருடைய வசனத்தோடு கூடியதுமான தண்ணீராயிருக்கிறது.

௩௱௪. வினா. அது பராபரனுடைய கற்பனையினால் ஸ்தாபிக்கப்பட்டதும் அவருடைய வசனத்தோடு கூடியதுமான தண்ணீரென்று சொல்லுவானேன்.

விடை. மெய்யான பராபரனாகிய இயேசுகிறிஸ்து ஞானஸ்நானத்தை ஞானத்திரவியமாகக் கட்டளையிட்டு அதைக்குறித்து மகாபெரிய வார்த்தைப்பாடுகளைக் கொடுத்தார். ஞானஸ்நானங் கொடுக்கும்போதெல்லாம் பராபரன் அதைப்பற்றித் திருவுளம்பற்றின தேவவசனம் பெலனாயிருந்து ஞானஸ்நானத்தின் நன்மைகளையெல்லாம் நமக்குத் தருகிறதினால் இப்படிச்சொல்லுகிறோம்.

வினா. பராபரன் ஞானஸ்நானத்தைப்பற்றிக் கற்பித்த அந்த வசனமென்ன.

விடை. பரிசுத்த மத்தேயு எழுதின கடைசி அதிகாரத்தில் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து திருவுளம்பற்றினதுதான். அதாவது, நீங்கள் (லோகமெங்கும்) போய்ச் சகலசாதிகளையுஞ் சீஷராக்க அவர்களுக்குப் பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுங்களென்பதே.

௩௱௫. வினா. ஞானஸ்நானங் கொடுக்கத்தக்கவர்களார்.

விடை. திருச்சபையில் பராபரனுடைய உக்கிராணக்காரராகிய குருக்கள் ஞானஸ்நானங் கொடுக்கத்தக்கவர்கள் (௧ கொரி. ௪, ௧). ஆனால் அவசரமான நேரங்களில மற்றக் கிறிஸ்தவர்களும் ஞானஸ்நானங் கொடுக்கலாம்.

௩௱௬. வினா. ஞானஸ்நானம் பெறத்தக்கவர்களார்.

விடை. பராபரனுடைய இராச்சியத்தில் உட்படத்தக்கவர்களாயிருக்கிற சகலரும் ஞானஸ்நானம் பெறத்தக்கவர்களாயிருக்கிறார்கள் (மத். ௨௪, ௰௪; ௨௮, ௰௯).

க) கிறிஸ்தவர்களின் பிள்ளைகள் பிறந்த கொஞ்சக காலத்திற்குள் ஞானஸ்நானம் பெறவேண்டியது, (மத். ௰௯, ௰௪).

உ) திருச்சபையில் இன்னஞ் சேராதிருக்கிற விவரந் தெரிந்தவர்களும் இரட்சிப்பதற்கான ஞான உபதேசத்தையறிந்து குணப்பட்டு விசுவாசிக்கிறவர்களாய் ஞானஸ்நானம் பெறவேண்டும் (மத். ௰௮, ௩).

௬௭. வினா. ஆருடைய நாமத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கவேண்டும்.

விடை. பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கவேண்டும் (மத். ௨௮, ௰௯).

௬௮. வினா. ஞானஸ்நானத்தில் காணப்படுகிற பூமிக்கடுத்த காரியமென்ன.

விடை. தண்ணீர்தான் (யோவா. ௩, ௫; எபேசி. ௫, ௨௬; க பேது. ௩, ௨௰. ௨௧).

௬௯. வினா. வானத்துக்கடுத்த காணப்படாத காரியமென்ன.

விடை. ஞானஸ்நானத்தின் தண்ணீரோடு பிதாகுமாரன் பரிசுத்தஆவியாகிய திரியேக பராபரன்கூட இருந்து மனிதனாகிய தமது ஊழியக்காரனைக்கொண்டு ஞானஸ்நானங் கொடுத்து அதைப்பெறுகிறவனை இரட்சிப்பதற்கான தமது ஐக்கியத்தில் உட்படப்பண்ணுகிறார் என்கிறது வானத்துக்கடுத்த காணப்படாத காரியமாம். ஞானஸ்நானம் பெறுகிறவன் கிறிஸ்துவுக்குள்ளாகித் தன்னைப் பிதாவுக்குப் பிள்ளையாக மறுசென்மமாய்ச் செனிப்பிக்கிற பரிசுத்தஆவியைப்பெற்றுக்கொள்ளுகிறான் (ரோமர் ௬, ௩; யோவா. ௩, ௫; தீத்து. ௩, ௫).

ஞானஸ்நானத்தின் பிரயோசனத்தைப் பற்றியது.

வினா. ஞானஸ்நானத்தினால் உண்டாகும் பிரயோசனமென்ன.

விடை. அதினால் பாவங்கள் மன்னிக்கப்பட்டு மரணமும் பிசாசின் வல்லமையும் நீங்கிப்போய் நித்திய மோட்சங் கொடுக்கப்படும். ஏனென்றால் பராபரன் இதற்காகத் திருவுளம்பற்றின வசனமுங் கொடுத்த

வார்த்தைதம்மாமேம் எப்படிச்சொல்லுகிறதோ அப்படி அவைகளை விசுவாசிக்கிறவர்களுக்கு ஞானஸ்நானத்தினால் கிடைக்கும்.

வினு. பராபரன் இதற்காகத் திருவுளம்பற்றின வசனமுங் கொடுத்தவார்த்தைப்பாடுமென்ன.

விடை. பரிசுத்தமாற்கு எழுதின கடைசி அதிகாரத்தில் நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து திருவுளம் பற்றினதுதான். அதாவது, விசுவாசித்து ஞானஸ்நானம பெற்றவன் இரட்சிககப்படுவான். விசுவாசியாதவனே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவானென்பதாம்.

௩௱௰. வினு. ஞானஸ்நானத்தினுல் உண்டாகும் பிரயோசனம் எத்தனை விதமாயிருக்கிறது.

விடை. இரண்டுவிதமாயிருக்கிறது. ௧) அது பொல்லாப்பிலிருந்து நமமை இரட்சிக்கும். ௨) நமக்கு மோட்சங் கொடுக்கும்.

௩௱௰௧. வினு. அது எந்தப்பொல்லாப்பிலிருந்து நம்மை இரட்சிக்கும்.

விடை. பாவததிலும மரணததிலும் பிசாசின் வல்லமையிலுமிருநது நமமை இரட்சிககும்.

௩௱௰௨. வினு. அது பாவத்திலிருநது நம்மை இரட்சிக்கிறதெபபடி.

விடை. ௧) நாம் விசுவாசமுள்ளவாகளாய் ஞானஸ்நானம் பெறுமபோது நம்முடைய பாவங்களெல்லாம் நமககு மன்னிக்கபபடுகிறது (நடபடி ௨, ௩௮; எபேசி. ௫, ௨௬).

௨) பாவம் இனி நம்மை ஆண்டுகொள்ளாதபடிக்கு அதின் வெலன கிழபபடுத்தபபடுகிறது (ரோம. ௬, ௩-௬).

௩௱௰௩. வினு. ஞானஸநானம நம்மை மரணததினின்று இரட்சிக்கிறதெபபடி.

விடை. ௧) ஞானஸ்நானம் பெற்றவர்கள் இவ்வுலகில் இன்னும் அநுபவிககவேண்டிய உபத்திரவங்கள் அவர்களுக்குச் சேதமாயிராமல பிரயோசனமாயிருககும் (ரோமர் ௮, ௩௫—௩௭).

௨) அவர்கள் மறற மனிதரைப்போலிறந்து போனுலுஞ் சரீர மரணம் அவாகளுக்கு ஆக்கினையாயிராமல் மோட்ச

த்தில் பிரவேசிக்கும் வாசலாயிருக்கும் (யோவா. ௰௧, ௨௫. ௨௬).

௩) நித்திய மரணம் அவர்களை யணுகாது (௧ கொரி, ௰௫, ௫௫. ௫௬).

௱௰௪. வினா. ஞானஸ்நானம் நம்மைப்பிசாசின் வல்லமையிலிருந்து இரட்சிக்கிறதெப்படி.

விடை. நாம் எல்லாரும் பாவத்தில் பிறந்திருக்கிறதினால் பிசாசுக்கு நமதுபேரில் வல்லமை உண்டாயிருக்கிறது. ஆனால் ஞானஸ்நானத்தினால் நமது பாவம் மன்னிக்கப்படும்போது பிசாசின் வல்லமை நம்மைவிட்டு நீங்கிப்போம் (கொலோ. ௧, ௰௨. ௰௩). அதின் போதனைகளையெல்லாஞ் செயங்கொள்ள விசுவாசத்தினால் நமக்குப் பெலனுண்டாகிறது (எபேசி. ௬, ௰௧. ௰௨; யாக். ௪, ௭). நம்மைக்குற்றப்படுத்தவும் பராபரனுடைய சித்தமில்லாமல் நமக்கு ஒரு பொல்லாப்புச்செய்யவும் பிசாசுக்குப் பெலனில்லை (யோபு ௧, ௰௨; ரோமர் ௮, ௩௩ – ௩௫).

௱௰௫. வினா. ஞானஸ்நானம் நமக்குக்கொடுக்கிற நன்மை என்ன.

விடை. நித்தியமோட்சந்தான் (௧ பேது. ௩, ௨௧).

௱௰௬. வினா. மோட்சமென்கிற நன்மை எத்தனை விதமாயிருக்கிறது.

விடை. மூன்று விதமாயிருக்கிறது. ௧) பிதாவாகிய பராபரன் நம்மைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளுகிறார் (கலாத். ௩, ௨௬).

௨) குமாரனாகிய இயேசுகிறிஸ்து தமது பரிபூரண நீதியை நமக்குப்பலிக்கப்பண்ணுகிறார் (௧ கொரி. ௧, ௩௰; கலாத். ௩, ௨௪).

௩) பரிசுத்தஆவியாகிய பராபரன் நம்முடைய இருதயங்களில் வாசமாயிருந்து தமது தேவவரங்களை நமக்குக் கட்டளையிடுகிறார் (தீத்து ௩, ௬. ௭; ௧ கொரி. ௩, ௰௬).

௱௰௭. வினா. இம்மூன்று பெரிய நன்மைகளிலடங்கியிருக்கிற நன்மைகளென்ன.

விடை. ௧) பராபரன் நம்மைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டதினால் அவருடைய கிருபை, பட்சம், அன்புடைகப் பராமரிப்பு, நமது பெலவீனங்களைப்பொறுக்கிற பொறுமை முதலிய நன்மைகள் நமக்கு இவ்வுலகில் கிடைக்கும். மறுமையில் நித்திய சுதந்தரங் கொடுக்கப்படும் (௧ யோவா.

௩, ௧; மத். ௬, ௰௨; ௭, ௰௧; சங்கீ. ௫௰, ௰௩. ௰௪; ரோம. ௮, ௰௭).

௨) குமாரனாகிய இயேசுக்கிறிஸ்து நமது பரிபூரண நீதியை நமக்குப்பலிக்கப்பண்ணினதினால் நமக்குப் பாவமன்னிப்பு, சமாதானம், விடுதலை முதலிய நன்மைகள் கிடைக்கும். நாம் இவ்வுலகில் அவரோடு ஐக்கியம்பண்ணி மறுமையில்நித்தியசீவனுக்குப் பங்குள்ளவாகளாவோம் (ரோமர் ௫, ௧. ௨. ௰. ௰௧; ௮, ௧. ௨; கலா. ௫, ௧; எபேசி. ௫, ௩௰-௩௨; யோவா. ௰௭, ௨௨-௨௪).

௩) பரிசுத்தஆவியாகிய பராபரன் நமது இருதயத்தில் வாசம்பண்ணுகிறதினால் அவர் ஞானக்காரியங்களை நமக்குத்தெரியப்பண்ணி விசுவாசம், சிநேகம், நம்பிக்கை, ஞானச்சந்தோஷம் முதலிய தேவவரங்களை நமக்குப்பலிக்கப்பண்ணுவார். நம்மில் தொடங்கின நற்கிரியையை முடிய நடத்தி நமக்கு நித்தியசீவனையளிப்பார் (௧ கொரி. ௨, ௰-௰௩; ரோமர் ௮, ௰௪-௰௬; கலாத். ௫, ௨௨. ௨௩).

௩௰௮. வினா. இந்த நன்மைகளை எம்மட்டும் அநுபவிப்போம்.

விடை. இந்த நன்மைகளை நாம் ஞானஸ்நானத்தில் விசுவாசத்தினால் பெற்றுக்கொண்டபடியால் விசுவாசத்தில் நிலைத்திருக்குமட்டும் இந்த நன்மைகள் நமக்கிருக்கும். முடிவுமட்டும் விசுவாசத்தில் நிலைத்திருந்தால் என்றென்றைக்கும் அவைகளை அநுபவிப்போம் (மத். ௨௪, ௰௩).

வினா. இத்தனை கனமான நன்மைகள் தண்ணீரால் வரக்கூடுவதெப்படி.

விடை. இந்த நன்மைகள் தண்ணீராலல்ல, அத்தோடுகூடிய பராபரனுடைய வசனத்தினாலும் அந்த வசனத்தை நம்புகிற விசுவாசத்தினாலும் வரும், பராபரனுடைய வசனத்தையல்லாத தண்ணீர் ஞானஸ்நானமாயிராமல் வெறுந் தண்ணீராயிருக்கிறது. ஆனால் பராபரனுடைய வசனத்தோடு கூடியதண்ணீர் ஞானஸ்நானமாயிருக்கிறது. அது கிருபையாயிரட்சிக்கிற சீவதண்ணீரும் பரிசுத்தஆவி நடப்பிக்கிற மறுஜெனன முழுக்குமாம். இதைப்பற்றி பரிசுத்த பவுல் தீத்துவுக்கெழுதின நிருபத்தின் மூன்றும் அதிகாரத்தில்

சொல்லியிருக்கிறதாவது, மறு ஜெனனமாக்குதலும் பரிசுத்த ஆவியின்புதிதாக்குதலுமுடைய ஸ்நானத்தால் பராபரன் நம்மை இரட்சித்தார். அவர்பரிசுத்த ஆவியை, நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினால் நம்முடையபேரில் பரிபூரணமாக ஊற்றினார். நாம் அவருடைய கிருபையால் நீதிமான்களாக்கப்பட்டு நாம் நம்புகிறபடி நித்தியசீவனின் சுதந்தரராவதற்கு அப்படிச்செய்தார். இது உண்மையான வார்த்தை.

௬௱௰௧. வினா. பராபரன் நம்மை ஞானவழியாய்ச் செனிப்பிக்கிறவிதமென்ன.

விடை. பராபரன் தமது கிருபையின்படி நம்மைத் தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு சொல்லக்கூடாத பிரகாரமாக ஞானக்குணத்தையும் ஞானச்சீவனையும் நம்மிடத்தில் உண்டுபண்ணி நன்மையைச் செய்யும்படிக்கான பெலனை நமக்குக்கொடுக்கிறார். இதைத்தான ஞானச்சென்மமென்று சொல்லுகிறோம் (யோவா. ௩, ௫. ௬; ௨ கொரி ௫, ௰௭; எபேசி. ௨, ௰)

௬௱௰௨. வினா. புதிதாக்குதலாவதென்ன.

விடை. மறுசென்மத்தினால் ஞானவழியாய்ப் பிறந்தவன் அநுதினமும் பாவத்துக்குச் செத்து நவமான சீவனில் நடக்கிறதுக்கான பெலனைப் பெற்றுக்கொள்ளுகிறதுதான் புதிதாக்குதலென்று சொல்லப்படும் (எபேசி. ௪, ௨௨-௨௪).

*ஞானஸ்நானத்தில் காணப்படுகிற அடையாளத்துக்கு ஞான அர்த்தம் இன்னதென்பதைக்குறித்தது.

வினா. தண்ணீரால் ஞானஸ்நானங் கொடுக்கிறதென்பதற்கு ஞான அர்த்தம என்ன.

விடை. நமமில இன்னும் மீதியாயிருக்கிற பழைய மனிதன் சகல பாவங்களோடும் ஆகாத இச்சைகளோடும் அன்றாடக மனஸ்தாபத்தினாலுந் தவசினாலும் அமிழ்ந்திச்சாகவும் பராபரனுக்கு முன்பாக நீதியோடுஞ் சுத்தாங்கத்தோடும் என்றென்றைக்கும் பிழைக்

கிற புதிய மனிதன் நம்மில் மறுபடியும் அநுதினமும் உயிர்த்தெழவும் வேண்டுமென்பதே அதற்கர்த்தமாம்.

வினா. இது எவ்விடத்திலெழுதியிருக்கிறது.

விடை. பரிசுத்த பவுல் ரோமருக்கெழுதின நிருபத்தின் ஆறும் அதிகாரத்தில் தான். அதாவது, நாம் ஞானஸ்நானத்தினால் கிறிஸ்துவோடுகூட மரணத்திற்குள் அடக்கம்பண்ணப்பட்டோம். எதற்கென்றால் பிதாவின் மகிமையினால் கிறிஸ்து மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டதுபோல் நாமும் புதிய சீவனில் நடக்கிறதற்குத்தான்.

௬௨௧. வினா. ஞானஸ்நானத்தில் அமிழ்ந்திச்சாகவேண்டியதென்ன.

விடை. பழைய ஆதாமாகிய சென்மசுபாவமும் அது நம்மில் கிளம்பப்பண்ணுகிற ஆகாத இச்சைகளும் ஞானஸ்நானத்தில் அமிழ்ந்திச் சாகவேண்டும் (கலாத். ௫, ௨௪).

௬௨௨. வினா. நாம் இதற்காகச் செய்யவேண்டியதென்ன.

விடை. நாம் நமது பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பி ஞானஸ்நானத்தில் பராபரனுக்குப் பிள்ளைகளாகப் பிறந்தபிற்பாடு நம்மிடத்தில் இன்னும் மீந்திருக்கிற சென்மப்பாவம் நமக்குள் சும்மாயிராமல் எப்போதும் ஆகாத ஆசை இச்சைகளை உண்டாக்கும். ஞானஸ்நானம் பெற்றவன் இப்படிக்கொத்த ஆகாத ஆசை இச்சைகளைத் தன்னிடத்தில் கண்டால், தான் கிறிஸ்துவின் மரணத்துக்குள் பெற்றுக்கொண்ட ஞானஸ்நானததின் பலத்தினால் அதுகளுக்கு எதிர்த்து நின்று அன்றாடகத்தவசினால் பழைய துர்க்குணத்தைச்சேர்நத எல்லாவற்றையும் மென்மேலுங் கீழ்ப்படுத்தி மரணபரியந்தம் ஞானச்சேவகர்களாகச் சகல பொல்லாப்புக்கும் எதிராய்ப்போர்செய்யவேண்டும் (ரோமர் ௬, ௩).

௬௨௩. வினா. ஞானஸ்நானத்தில எழுந்திருக்கவேண்டியதென்ன.

விடை. நீதியோடுஞ் சுத்தாங்கத்தோடும் நடக்கிறவமான மனிதன் எழுந்திருக்கவேண்டும். ஏனெனில் நாம் ஞானஸ்நானத்தில் பொல்லாப்பைத் தள்ளுகிறதற்கான பெலத்தைமாத்திரமல்ல, இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின் பெலத்தினால் நல்லவர்களாக நடக்கிறதற்கான பெலத்தையும் அதில பெறுகிறோம். நாம் பின்வாங்காமல் விசு

வாசத்தில் நிலைத்திருந்தால் இந்தப்பெலனும் ஞானஸ்நானத்தினால் வருகிற எல்லாப்பிரயோசனங்களும் நமக்கு மரணபரியந்தங் கிடைக்கும் (ரோமர் ௬, ௩; கொலோ. ௨, ௰௨).

௬௨௪. வினா. ஞானஸ்நானத்தில் பராபரனும் மனிதனும் ஒருவருக்கொருவர் பண்ணுகிற உடன்படிக்கையென்ன.

விடை. பராபரன், விசுவாசித்து ஞானஸ்நானம்பெறுகிறவனைப்பார்த்து, நாம் உன் பாவங்களை மன்னித்து உன்னை நமது பிள்ளையாக ஏற்றுக்கொண்டு உனக்குப்பிதாவும் பராபரனுமாயிருந்து நம்முடைய நன்மையையும் மோட்ச இராச்சியத்தையும் உனக்குச் சுதந்தரமாகக் கொடுப்போமென்று உடன்படிக்கைபண்ணுகிறார். ஞானஸ்நானம் பெறுகிறவன், பராபரனைப்பார்த்து, நான் பாவங்களையும் பிசாசையும்விட்டுத் திரியேக பராபரனாகிய தேவரீர் ஒருவரைமாத்திரம் என்னுடைய பராபரனுங் கர்த்தரும் பிதாவுமாக ஏற்றுக்கொண்டு என்னைத்தேவரீருக்கு முழுவதும் ஒப்புக்கொடுத்துத் தேவரீருடைய சத்தியவேதத்தின்படி மரணபரியந்தம் நடப்பேனென்று வார்த்தைப்பாடுகொடுக்கிறான் (௧ பேது. ௩, ௨௧).

௬௨௫. வினா. இந்த உடன்படிக்கை எத்தனைகாலத்துக்குச் செல்லும்.

விடை. இந்த உடன்படிக்கைப் பராபரனிடத்தில் உறுதியான நித்திய உடன்படிக்கையாயிருக்கிறது. ஆனால் மனிதன் தான் ஞானஸ்நானத்தில் விட்டு விட்ட பாவங்களுக்கு மறுபடியும் ஊழியக்காரனானால் அவன் தான் செய்த உடன்படிக்கையைமீறி அதைத்தன்னிடத்தில் அவத்தமாக்கிக்கொள்ளுகிறான் (எசா. ௫௪, ௰).

௬௨௬. வினா. ஒருவன் ஞானஸ்நானத்தில்பண்ணின உடன்படிக்கையைமீறின பிற்பாடு அதற்குத் திரும்பவும்பங்குள்ளவனாவதற்கு மறுபடியும் ஞானஸ்நானம் பெறவேண்டுமோ.

விடை. மறுபடியும் ஞானஸ்நானம் பெறவேண்டியதில்லை. இப்படிக்கொத்தவன் மெய்யாகவே மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினால் ஞானஸ்நானத்தின் உடன்படிக்கைக்கு மறுபடியும் பங்குள்ளவனாகலாம்.

௬௨௭. வினா. நாம் என்னத்துக்கு அடையாளமாக ஞானஸ்நானத்தில் சிலுவையின் அடையாளத்தையேற்றுக்கொள்ளுகிறோம்.

விடை. நமது பழைய மனிதன் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டதென்பதற்கும் நாம் அவரைப்பின்,

சென்று உபத்திரவமாகிய சிலுவையை நமதுபேரில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்கிறதற்கும் அடையாளமாகத்தான் (ரோமர் ௬, ௬; மத். ௰௬, ௨௪).

௬௨௮. வினா. ஞானஸ்நானத்துக்கடுத்த உபதேசத்தையறிந்திருக்கிற நாம் செய்யவேண்டியதென்ன.

விடை. ௧) ஞானஸ்நானத்தின் நன்மைகளையெல்லாம் விசுவாசத்தினால் நமக்குப்பலிக்கப்பண்ணின ஞானஸ்நானத்தில் நமக்குக்கொடுக்கப்பட்ட நாமத்தினால நாம அழைக்கப்படுகிறதை எத்தனைவிசை கேட்கிறோமோ அத்தனைவிசை ஞானஸ்நானத்தில் நமக்குக்கிடைத்த உபகாரங்களையும் நாம் அதில் பண்ணின உடன்படிக்கையையும் நினைக்கவேண்டும்.

௨) நாம ஞானஸ்நானத்தில் பெற்றக்கிருபையில் இன்னம் நிலைத்திருக்கிறோமோ அல்லது நாம லோகத்தைச் சிநேகிக்கிற சிநேகத்தினால் அதை இழந்து போனோமோவென்று நம்மைச்சோதிக்கவேண்டும.

௩) நாம் ஞானஸ்நானத்தில் பண்ணின உடன்படிக்கையைக்காக்காமல்மீறினால உடனேமனந்திரும்பி அதைப் புதிதாக்கவேண்டும்.

௪) ஞானஸ்நானத்தில் நமக்குக் கொடுக்கப்பட்ட தேவ பலத்தினால் நாம் பழைய மனிதனைக் களைந்துபோட்டுப் புதிய மனிதனைத்தரித்துக்கொள்ளவும் ஞான ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு ஞான சத்துருக்களாகிய பிசாசு லோகம் மாமிசம் என்றவைகளோடுபோராடவும் அநுதினமுஞ் சுறுசுறுப்பாயிருக்கவேண்டும.

௫) நாம் சிலுவை என்னும் உபத்திரவத்தை யநுபவிக்க ஞானஸ்நானத்தினால் அழைக்கப்பட்டிருக்கிறபடியால் சகல உபத்திரவங்களையும பொறுமையோடுசகிக்கவேண்டும்.

௬) நாம் ஞானஸ்நானத்தில் பண்ணின உடன்படிக்கையின்படி மரணபரியந்தம் பராபரனுக்கு உண்மையாயிருக்கவேண்டும.

௬௨௯. வினா. ஞானஸ்நானத்துக்கு ஞானத் தாய் தகப்பன்மாராவைக்கப்படுகிறார்களே, இவர்கள் கடமை என்ன.

விடை. சிறுபிள்ளைகள் ஞானஸ்நானம் பெறுகிறபோது ஞானத் தாய் தகப்பன்மார அதுகளின நாமத்தினால் பராபரனுக்கு வார்த்தைப்பாடுகொடுக்கிறார்கள். வயதுவந்தவர்கள் ஞானஸ்நானம் பெறும்போது அவர்கள் கொடுக்கிற வார்த்தைப்பாட்டுக்குச் சாட்சிக்காரராயிருக்கிறார்கள். ஆனதினால் அவர்கள் தங்கள் ஞானப்பிள்ளைகளுக்காக அநுதினமும்

பராபரனை வேண்டிக்கொண்டு ஞானஸ்நானத்தின் நன்மை யெல்லாம் இவர்களுக்குக் கிடைக்கும்படிக்குக் கவலையா யிருந்து இவர்கள் ஞானோபதேசங்களை நன்றாய்ப்படித்து வளா ரவும் இவர்கள் ஏற்றுக்கொண்ட விசுவாசத்தில் பின்வாங்கா மல் நிலைகொண்டிருந்து மோட்சமடையவும் உதவியாயிருக்க வேண்டும.

௬௩௰. வினா. விசுவாசிக்கிற நமக்கு ஞானஸ்நானத்தினால் வருகிற ஆறுதலென்ன.

விடை. ௧) பராபரன் நம்முடைய கிரியைகளைப் பாராமல் அபாத்திரராகிய நமக்கு ஞானஸ்நானத்தில் அவ்வ ளவு கனமான திரவியங்களைக்கட்டளையிட்டகிருபை பெரிய ஆறுதலென்றும் (தீத். ௩, ௪-௭),

௨) திரியேக பராபரனுடைய நாமத்தினால் ஞானஸ்நா னம்பெற்ற நாம் அவருடையபாரிசமானோம். அவர்நமதுபாரிச மானார். ஆதலால் நாம ஆத்துமத்தின்படியேயுஞ் சரீரத்தின் படியேயும், இம்மையிலும் மறுமையிலும் பாக்கியவானகளா யிருப்போமெனறும் இநதலோகததின் தீமைகளெல்லாம் நமக்கு நன்மையாகப்பலிக்குமென்றும (ரோமா ௮, ௨௮. ௨௯),

௩) நாம் அநுதினமும் பாவத்தைவிட்டுப் பராபரனு டையசித்தத்தின்படி செய்கிறதற்கான பலம் ஞானஸ்நானத் தில் நமக்குக்கொடுககபபட்டதென்றும் (பிலிப். ௧, ௬; ரோமர் ௬, ௨; யோவான் ௰௫, ௫; ௧ பேதுரு ௧, ௫),

௪) நாம ஞானஸ்நானம் பெற்றபடியால நியாயத் தீர்ப்பின் நாளில நமது சரீரம் மகிமையாயெழுந்திருக்கு மென்றும் ஆறுதலாக அறிந்திருககிறோம் (௧ பேது. ௧, ௫; ௧ கொரிந. ௰௫, ௨௯).

ஐந்தாம் பங்கு.

கர்த்தருடைய இராப்போசனக் கட்டளையைப்பற்றியது.

௬௯௧. வினு. புதிய ஏற்பாட்டின் இரண்டாம் ஞானத்திரவியமென்ன.

விடை. கர்த்தருடைய இராப்போசனந்தான். இது கர்த்தருடைய பந்தியென்றும், பீடத்தின் பரம இரகசியமென்றும், நற்கருணையென்றுஞ் சொல்லப்படும்.

௬௯௨. வினு. அது கர்த்தருடைய இராப்போசனமென்று, சொல்லப்படுவானேன்.

விடை. கர்த்தராகிய இயேசு தாங்காட்டிக்கொடுக்கப்பட்ட அன்றிராத்திரியில் அதைநமக்கு ஞானப் போசனமாகவும் ஞானப் பானமாகவும் ஏற்படுத்தினதினுல் அதைக் கர்த்தருடைய இராப்போசனமென்று சொல்லுகிருேம்.

௬௯௩. வினு. அதைக் கர்த்தருடைய பந்தியென்றுசொல்லுவானேன்.

விடை. கர்த்தர் அதில்தமது ஞானப பதார்த்தங்களை நமக்குப் பரிமாறி நம்முடைய ஆத்துமங்களை முசிப்பாற்றுகிறதினுல் அதைக்கர்த்தருடைய பந்தி என்று சொல்லுகிருேம்.

௬௯௪. வினு. அதுபீடத்தின் பரம இரகசியமென்று சொல்லப்படுவானேன்.

விடை. அது நமதுபுத்திக்கு மேலான இரகசியமாகக் கோவிலிலுள்ள பீடத்தின்மேல்வைக்கப்பட்டு நமக்குக்கொடுக்கப்படுகிறபடியினுல் இப்படிச்சொல்லப்படும்.

௬௯௫. வினு. அது நற்கருணையென்று சொல்லப்படுகிற முகாந்தரமென்ன.

விடை. இதை ஏற்படுத்தின இயேசுவானவர் தாம் லோகத்தை இரட்சித்த கிரியையினபிரயோசனங்களையெல்லாம் அதில் அடக்கிவைத்திருப்பதினுல் அதை நற்கருணையென்று சொல்லுகிருேம்.

வினு. கர்த்தருடைய இராப்போசனமாவதென்ன.

விடை. அது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்கட்டளையினுல் கிறிஸ்தவர்களாகிய நாம் அப்

மத்திற்குள்ளும் திராட்ச இரசத்திற்குள்ளும் இன்று குடிக்கிற அவருடைய மெய்யான சரீரமும் இரத்தமுமாயிருக்கிறது.

வினா. இது எவ்விடத்திலெழுதியிருக்கிறது.

விடை. பரிசுத்த மத்தேயு மாற்கு லூக்காவென்றவர்கள் எழுதின சுவிசேஷங்களிலும் பரிசுத்த பவுல் கொரிந்தியருக்கெழுதின முதல் நிருபத்திலுந்தான். அவைகளாவன, நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துதாங் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்றிராத்திரியில் அப்பத்தை எடுத்துக்கொண்டு ஸ்தோத்திரம்பண்ணி அதைப்பிட்டுத் தம்முடைய சீஷர்களுக்குக்கொடுத்து திருவுளம்பற்றினதாவது, நீங்கள் இதை வாங்கித்தின்னுங்கள். இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைக்கிறதற்காக இப்படிச்செய்யுங்களென்று திருவுளம்பற்றினார்.

பின்னையும் அந்தப்படியே இராப்போசனம் பண்ணினபின்பு அவர் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு ஸ்தோத்திரம்பண்ணி அவர்களுக்குக்கொடுத்து திருவுளம்பற்றினதாவது, இதிலே எல்லாருங் குடியுங்கள். இந்தப்பாத்திரம் பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தில் புதிய ஏற்பாடாயிருக்கிறது. இதை நீங்கள் குடிக்கும்போதெல்லாம் என்னை நினைக்கிறதற்காகச் செய்யுங்கள் என்று திருவுளம்பற்றினார்.

௬௬௬. வினா. நம்முடையநாதர் இயேசுகிறிஸ்து பரிசுத்த இராப்போசனத்தை எப்படிக்கொத்தவராக ஏற்படுத்தினார்.

விடை. சர்வத்திற்கும் வல்ல பராபரனுகவுஞ்சத்திய வாசகராகிய பரம போதகராகவும் நாம் கீழ்ப்படியவேண்டியகர்த்தராகவும் நமது இரட்சிப்பின்மேல் ஆசைப்படுகிற பிரதான ஆசாரியராகவும் அதையேற்படுத்தினார். ஆதலால் நாம் அதைப் பற்றிச்சந்தேகிக்கவும் அதில் யாதொன்றை குறைக்கவுங் கூட்டவுங்கூடாது.

௬௬௭. வினா. அவரதை எப்போது ஏற்படுத்தினார்.

விடை. அவர் தாங்காட்டிக்கொடுக்கப்பட்ட அன்றி ராத்திரியில் தமது சீஷர்களோடு பந்தியிருந்து பஷாவுக் கடுத்த சடங்குகளை நிறைவேற்றித்தாம் பாடுபட்டு மரணம டைய வேண்டுமென்றிருந்தபோது அதையேற்படுத்தி தாம் அதை நவமாக நடப்பிக்கவருமட்டாக அதைத்திருச்சபையில் ஞானத்திரவியமாய் வழங்கும்படிக்குக் கட்டளையிட்டார். கர்த்தருடைய இராப்போசனம் அவர்கட்டளையிட்டபிரகார ந் கொடுக்கப்படுகிற நேரங்களில் எல்லாம் அவர் தாமே கூட இருக்கிறார் (க கொரி. யக, உங-உரு; மத். உஅ, உய).

கூகூஅ. வினா. திருச்சபையில் நற்கருணையைக்கொடுக்கத் தக்கவர்களார்.

விடை. குருக்கள்தான். இவர்கள் இப்படிப்பட்ட ஞானத்திரவியங்களுக்கு உக்கிராணக்காரராயிருக்கிறார்கள். (க கொரி. ச, க).

கூகூக. வினா. நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஆருக்குப் பிரயோசனமாக இராப்போசனத்தை யேற்படுததினார்.

விடை. அவர் தமது திருச சரீரத்தை ஒப்புக்கொடுத்த தினாலுந் தமது திரு இரத்தத்தைச்சிந்தினதினாலுஞ் சகலமனி தருடைய பாவங்களை எப்படிப்போக்கினாரோ அப்படியே தமது திருச்சரீரத்தை ஒப்புக்கொடுத்ததினாலுண்டான பலன் களையுந் திரு இரத்தத்தைச் சிந்தினதினாலுண்டானபலன்களை யும் ஞானப்போசனமாகவும் ஞானபானமாகவும் பலிக்கப் பண்ணுகிற இராப்போசனத்தைச்சகலமனிதருக்கும் பிரயோ சனமாக ஏறபடுத்தினா (க யோவான் உ, உ).

கூசய. வினா. கர்த்தருடைய இராப்போசனத்தில் எத்தனை காரியங்களுண்டு.

விடை. இரண்டுகாரியங்களுண்டு. பூமிக்கடுத்ததுங் காணப்படுகிறதுமான காரியமொன்று. வானததுக்கடுததுங் காணப்படாததுமான காரியமொனறு.

கூசக. வினா. பூமிக்கடுத்ததுங் காணப்படுகிறதுமான காரி யமென்ன.

விடை. அப்பமுங் கொடிமுந்திரிகைப்பழ இரசமுந் தான்.

கூசஉ. வினா. வானத்துக்கடுத்ததுங் காணப்படாததுமான காரியமென்ன.

விடை. கிறிஸ்துவின் திருச்சரீரமுந் திரு இரத்தமுந் தான்.

௬௪௩. வினு. நாம் நற்கருணையில் ஸ்தாபிக்கப்பட்ட அப்பத்தை வாங்கும்போது அத்தோடேகூட என்னத்தை வாங்குகிறோம்.

விடை. கர்த்தருடைய மெய்யான திருச்சரீரத்தை வாங்குகிறோம்.

௬௪௪. வினு. நாம் நற்கருணையில் ஸ்தாபிக்கப்பட்ட கொடிமுந்திரிகைப்பழ இரசத்தை வாங்கும்போது அத்தோடேகூட என்னத்தை வாங்குகிறோம்.

விடை. கர்த்தருடைய மெய்யான திரு இரத்தத்தை வாங்குகிறோம்.

கர்த்தருடைய இராப்போசனத்தின் பிரயோசனத்தைப்பற்றியது.

வினு. நாம் இப்படித் தின்றுகுடிப்பதினால் நமக்குண்டாகும்பிரயோசனமென்ன.

விடை. இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகக் கொடுக்கப்படுகிறதென்றுஞ் சிந்தப்படுகிறதென்றுந் திருவுளம்பற்றினவார்த்தைகளே இதின் பிரயோசனத்தை வெளிப்படுத்தும். அந்த வார்த்தைகளினால் பாவமன்னிப்புஞ் சீவனும் மோட்சமுங் கர்த்தருடைய இராப்போசனத்திலே நமக்குண்டு. ஏனெனில் பாவமன்னிப்பு எங்கேயோ அங்கே சீவனும் மோட்சமுமிருக்கும்.

௬௪௫. வினு. கர்த்தருடைய இராப்போசனத்தில் எத்தனை பிரயோசனங்களுண்டு.

விடை. மூன்று. அதாவது, பாவமன்னிப்புஞ் சீவனும் மோட்சமுமாம்.

௬௪௬. வினு. நாம் கர்த்தருடைய இராப்போசனத்தில் பாவமன்னிப்பையடைகிறோமா.

விடை. ஆம், நாம் அதில் தின்றுகுடிக்கிற கிறிஸ்துவின் திருச்சரீரமுந் திரு இரத்தமும் அவர் நமக்காகக் கொடுத்த அவருடைய திருச்சரீரமும் பாவமன்னிப்புக்கென்று நமக்காகச்சிந்தின அவருடைய திரு இரத்தமுந்தான்.

௬௪௭. வினு. கர்த்தருடைய இராப்போசனத்தில் நமக்குக் கிடைக்குஞ் சீவனென்ன.

விடை. நாம் பாவத்தினால் இழந்துபோய் ஞானஸ்நானத்தினால் திரும்பப்பெற்றுக்கொண்ட ஞானச் சீவன்தான். இந்த ஞானச்சீவன் நம்மைவிட்டு நீங்கிப்போகாமல் நம்மில் நிலைகொண்டிருந்து மென்மேலும் விர்த்திக்கும்படிக்குக் கர்த்தருடைய இராப்போசனத்தில் கர்த்தராகிய இயேசுவோடும் அவரை விசுவாசிக்கிறவர்களோடும் ஞான ஐக்கியம்பண்ணுகிறோம் (யோவா. ௬, ௫௧. ௫௫—௫௭; ௧ கொரிந். ௰, ௰௭; ௰௨, ௰௩).

௬௪௮. வினா. இந்த ஞானச்சீவனாவதென்ன.

விடை. விசுவாசம், சிநேகம், நம்பிக்கை, ஞானச்சந்தோஷம் முதலிய நவமான நற்குணமெல்லாம் மறுசென்மத்தினால் நமக்குண்டாகிப் பரிசுத்த இராப்போசனத்தினால் நம்மில் திடப்படும் ஞானச்சீவன்தான். மேலுங் கிறிஸ்துவின் திருச்சரீரந் திரு இரத்தமென்றவைகளின் ஞானப்பலத்தினாலும் நம்முடைய சரீரங்கடைசிநாளில நித்திய சீவனுக்கென்று உயிரோடெழுந்திருக்கும் (யோவா. ௬, ௫௪).

௬௪௯. வினா. கர்த்தருடைய இராப்போசனத்தில் நமக்கு அகப்படும் மோட்சமென்ன.

விடை. க) நாம் அதில் இயேசுநாதர் நம்முடைய இரட்சிப்புக்காகப் பலியிட்ட அவருடைய திருச்சரீரத்தையுந் திரு இரத்தத்தையுந் தின்று குடிக்கிறதினால் அவர் சம்பாதித்த இரட்சிப்பின எல்லா நன்மைகளுக்கும் பங்குள்ளவர்களாகி இவ்வுலகத்திலேயே மோட்சசாலிகளாகிறோம்.

உ) நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மகிமையின் ஆண்டவராயிருந்து மகிமைப்பட்ட தம்முடைய திருச்சரீரத்தையுந் திரு இரத்தத்தையும் நமக்குக் கொடுக்கிறபடியால் அவர் இருக்கிற மகிமையின் இராச்சியத்தில் பிரவேசித்து நித்தியமோட்சபாக்கியத்தை அடைவோமென்று நிச்சயித்திருக்கிறோம்.

வினா. தின்றுகுடிப்பது இத்தனை பெரிய நன்மைகளைச் செய்வதெப்படி.

விடை. தின்று குடிப்பது இவைகளைச்செய்கிறதல்லவே. இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகக்கொடுக்கப்படுகிறதென்றுஞ் சிந்தப்படுகிறதென்றுந் திருவுளம்பற்றியவார்த்தைகளே இவைகளைச் செய்கிறது. தின்றுகுடிப்பதோடு இந்தவார்த்தைகளே கர்த்தரு

டைய இராப்போசனத்தில் பிரதானபொருட்களாயி ருக்கிறது. இந்த வார்த்தைகளை விசுவாசிக்கிறவன் இவைகளில் சொல்லியிருக்கிற ' பாவமன்னிப்பைப் பெற்றிருக்கிறான்.

௬௫. வினா. இப்படியிருக்கத்தின்று குடிப்பது வேண்டியதில்லையென்று சொல்லலாமா.

விடை. சொல்லக்கூடாது. ஏனெனில் தின்கிறதும் குடிக்கிறதும் இந்தப்பிரயோசனங்களைப் பெறுவதற்கான எத்தனமாயிருக்கிறது. ஆனால் அதைநமக்குப் பலிக்கப் பண்ணும் பெலன் என்னவென்றால் அது தின்கிறதும் குடிக்கிறதுமல்ல, கர்த்தர்பரிசுத்த இராப்போசனத்தைக் குறித்துத் திருவுளம்பற்றின வார்த்தைகளும் அதற்குக்கொடுத்த வார்த்தைப்பாடுகளுந்தான். இந்தப்பிரயோசனங்கள் நமக்குக் கிடைக்கும்படி விசுவாசிக்கவேண்டும்.

கர்த்தருடைய இராப்போசனத்துக்கடுத்த ஆயத்தத்தைப்பற்றியது.

' ௬௬. வினா. கர்த்தருடைய இராப்பேசனத்தை வாங்குகிறவர்களெல்லாரும் அதின பிரயேரசனங்களையடைவாரகளோ.

விடை. எல்லாருங் கிறிஸ்துவின் திருச்சரீரத்தையுந் திரு இரத்தையும்வாங்குவார்கள். ஆனால் ஆயத்தபபடாதவர்களாக அதைவாங்குகிறவர்கள் அதின்பிரயோசனங்களைத் தங்களிடத்தில் அவத்தமாக்கித் தங்களுக்கு நியாயத்தீர்ப்பைப் புசித்துக் குடிக்கிறார்கள்.

வினா, கர்த்தருடைய இராப்போசனத்தைப் பாத்திரமாய் வாங்கத்தககவனார்.

விடை, உபவாசமுதலிய சரீர ஒடுக்கம் புறம்பான நல்லொழுக்கந்தானே. ஆனால் இது பாவமன்னிப்புக்கென்று உங்களுக்காகக் கொடுக்கப்படுகிறதென்றுஞ் சிந்தப்படுகிறதென்றுந் திருவுளம்பற்றிய வார்த்தைகளை விசுவாசிக்கிறவனே இதற்குநல்ல ஆயத்தப்பட்டவனும் பாத்திரனுமாயிருக்கிறான். இந்தவார்த்தை

களை விசுவாசியாதவனுஞ் சந்தேகப்படுகிறவனும் இதற்கு அபாத்திரனும் ஆயத்தமில்லாதவனுமாயிருக்கிறான். உங்களுக்காக என்கிறவார்த்தைக்குப் பூரண விசுவாசமுள்ள இருதயமே தேவை.

௬௫௨. வினா. இந்தவார்த்தைகள் என்னத்தைப்பற்றியது.

விடை. கர்த்தருடைய இராப்போசனத்தை வாங்குகிறதற்கு முன்னேசெய்யும் இரண்டுவித ஆயத்தத்தைப்பற்றியது. அதாவது புறம்பான ஆயத்தமும் இருதய ஆயத்தமுமாம்.

௬௫௩. வினா. புறம்பான ஆயத்தமென்ன.

விடை. உபவாசமுதலிய சரீர ஒடுக்கமும் மனத்தாழ்மையைக்காட்டும் வஸ்திரங்களும் உடுபாவனைகளும் புறம்பான ஆயத்தமாம். ஆனால் இருதய ஆயத்தத்தையல்லாமல் புறம்பான ஆயத்தம் பராபரனுக்குப் பிரீதியாயிராது (தானி. ௯, ௩-௰௪; மத். ௰௫, ௮).

௬௫௪. வினா. இருதய ஆயத்தத்துக்கடுத்த பிரதானகாரியங்களென்ன.

விடை. மூன்று பிரதானகாரியங்களுண்டு.

௧) செய்த பாவங்களையறிகிறதினால வருகிற உத்தம மனஸ்தாபமும்,

௨) இயேசுகிறிஸ்துவினிடத்தில் அடைக்கலம் புகுகிற மெய்யான விசுவாசமும,

௩) இனிக்குணப்பட்டு நல்லவர்களாய் நடப்போமென்கிற உறுதியான பிரதிக்கினையுமாகிய இம்மூன்றுகாரியங்கள்தான். அவனவன் இந்த மூன்றுகாரியங்களின்படி தனைத்தான் சோதித்து கர்த்தருடைய இராப்போசனத்தை வாங்கவேண்டும் (௧ கொரிந். ௰௧, ௨௮).

௬௫௫. வினா. பாவங்களுக்காகப்படும் உத்தம மனஸ்தாபமென்ன.

விடை. ஒருவன் நியாயப்பிரமாணத்தின்படி தன்னைச்சோதித்துத்தான் ஆத்துமத்தின்படியேயுஞ் சரீரத்தின்படியேயும் பாவங்களினால் மிகவுங் கெடுக்கப்பட்டவனென்பதை யறிந்து பராபரனுக்கு விரோதமாகவும் பிறத்தியானுக்குந் தன் மனச்சாட்சிக்கும் விரோதமாகவும் நினைவுகளினாலும் வார்த்தைகளினாலுங் கிரியைகளினாலுஞ்செய்த பாவங்கள எவ்வளவு ஏராளமானதென்பதையறிந்து அதுகளால் எவ்வளவு நன்மைகளைப் போக்கடித்தேனென்றும் எவ்வளவு

தீமைக்குட்பட்டேனென்றும் எப்படிப் பராபரனுடைய உபகாரங்களையுங் கிறிஸ்து சம்பாதித்த இரட்சிப்பையும் நன்றியறியாதவனாக அவத்தமாககினேனென்றும் நன்றாய்த் தன் மனதை ஆராய்ந்தறிந்து துக்கப்பட்டு இந்தத் துக்கத்துக்கு அடையாளமாகப்பாவங்களையெல்லாம் மிகவும் அருவருத்துப் பராபரனுடைய நியாயத்தீர்ப்புக்குப் பயந்து அவர் பாதத்தில் விழுந்து தன்பாவஙகளைத் தாழ்மையாயறிக்கையிட்டு அவர் தனக்குக் கிருபைசெய்யவேண்டுமென்று கருத்தாய் வேண்டிக்கொண்டால் அது உத்தம மனஸ்தாபமாம் (உ கொரிந். எ, ய; சங்கீ. ருக, யஅ.)

சுருகூ. வினா., நல்ல ஆயத்தத்துக்கடுத்த விசுவாசமாவதென்ன.

விடை. தன் பாவங்களுக்காக உத்தம மனஸ்தாபப்படுகிறவன் பராபரன் இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தன் பாவங்களையெல்லாம் மன்னித்து ஈடேற்றமனதாயிருக்கிறாரென்றறிந்து கர்த்தருடைய இராப்போசனத்தில் எத்தனை நன்மைகளடங்கியிருக்கிறதென்றும் அதுகள் தனக்கு அகப்படுமென்றும் இருமனப்படாமல அங்கிகரித்து இயேசுகிறிஸ்துவுக்குள்ளான கிருபையினபேரில் தன் நம்பிக்கையை எல்லாம் வைததால் அது நல்ல ஆயத்தத்துக்கடுத்த விசுவாசமாம்.

சுருள. வினா. நல்ல ஆயத்தத்துக்குவேண்டிய உறுதியான பிரதிக்கினை என்ன.

விடை. உத்தம மனஸ்தாபப்பட்டு விசுவாசிக்கிறவன் இனிப்பாவத்துக்குப் பயந்து பாவமென்னப்பட்டதெல்லாவற்றையும் மிகவும்பகைதது மனதறிய ஒரு பாவமுஞ்செய்யாதபடிக்குத் தன்னைககாத்துப் பராபரனுடைய உபகாரங்களுக்கேற்ற நடக்கையாய் நடக்கத்தொடங்கிப் பராபரனைச் சினேகித்து அவருடைய கற்பனைகளுக்குச் சந்தோஷத்துடனேகீழ்ப்படிந்து அவர் அனுப்புகிற துன்பஙகளைப்பொறுமையாய்ச் சகித்து அவருடைய ஊழியத்தில் மரணபரிந்தம் உண்மையுள்ளவனாயிருப்பேனென்று உறுதியான உடன்படிக்கை பண்ணுகிறது நலல ஆயத்தத்துக்கடுத்த நிலையான பிரதிக்கினையாம். இநதப்பிரதிககினையிலலாதேபோனால் மனஸ்தாபமும் விசுவாசமும் உண்மையானதாயிருக்கமாட்டாது (க பேது. க, யச. யரு; எபேசி. ரு, க. உ).

சுஙிஅ. வினா. இந்தப் பிரதிக்கினையின்படி நாம் இன்னுஞ் செய்யவேண்டியதென்ன.

விடை. பரமபிதா எப்படி நம்முடைய குற்றங்களை மன்னித்தாரோ அப்படியே நாமும் மற்றவர்கள் குற்றங்களை மன்னித்து அவர்களுக்கு எந்தக் காரியத்திலும் சரிக்குச்சரிக் கட்டாமல் நமக்குப் பொல்லாப்புச் செய்கிறவர்களுக்கு நன்மைசெய்யவேண்டும் (மத். ௬, ௰௪. ௰௫).

௮௯. வினா. நாம் இப்படி ஆயத்தப்பட்டவர்களாகக் கர்த்தருடைய இராப்போசனத்தை வாங்கின பின்பு நமது கடமை என்ன.

விடை. பரிசுத்த இராப்போசனத்தையேற்படுத்தின கர்த்தரை நினைத்துக்கொண்டு அவருடைய மரணத்தையறிவித்து அவருடைய உபகாரங்களை மிகவும் மதித்து நன்றியறிந்தமனதோடே அவரைத் தோத்தரித்து அவரையும் பிறத்தியாரையும் உட்கருத்தாய்ச் சிநேகித்துச் சகல உபத்திரவங்களிலும் அவருடைய மாதிரியைப் பொறுமையாய்ப்பின்பற்றவேண்டும் (லூக்கா ௨௨, ௰௯; ௧ கொரி. ௰௧, ௨௬).

௯௰. வினா. கர்த்தருடைய இராப்போசனத்தை எத்தனை தரம் வாங்கவேண்டும்.

விடை. முதலாம் ஞானத்திரவியமாகிய ஞானஸ்நானத்தை ஒரே விசைபெறுகிறோம். ஆனால் இரண்டாம் ஞானத்திரவியமாகிய இராபபோசனத்தையடிக்கடிவாங்க உத்தரவுண்டு. அதை ஒருவருஷத்தில் இத்தனை தரம் வாங்கவேண்டுமென்கிற நிப்பந்தனை இல்லை. அவனவன் தன்னைத்தான் சோதித்தறிந்து இந்த ஞானப்போசனத்தின்பேரிலும்ஞானப்பானத்தின்பேரிலும் ஞானப்பசித்தாகமாகும்நேரங்களிலெல்லாம் அதை வாங்கலாம்.

PRINTED BY E. F. HOBURCH. AT THE EVANG. LUTH. MISSION. PRESS.